செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு உரு ★ வள்ளுவர் ஆண்டு ககூஅஉ ஆ... (Aug., 1961) ★ பரல் கஉ

Date

உள்ளுறை

பக்கம்

தமிழ் எழுத்து மாற்றம் — கழக புலவர்,
சித்தாந்தபண்டிதர், ப. இராமநாத பிள்ளை ருசரு

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
—கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி. ருசஅ

பாண்டியன் சடில பராந்தகன்
—சித்தாந்த கலாநிதி, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ருருங

கவிமணி கண்ட பண்டிதமணி — ஆசிரியர் ருசூ0

படர்க்கை ‘இ’ விகுதி
—பண்டித புலவ, வித்துவான், ஞா. தேவநேயன், எம்.ஏ. ருசூக

கலையின் வைப்பே! — புதுவை, முதுகண்ணன் ருசூஅ

தமிழ் நெடுங்கணக்கு — பெயரும் எண்ணும்
—இராவ்சாகிப், சைவப்புலவர், டாக்டர், தி. இரா.
அண்ணாமலைப்பிள்ளை, I.C.P.S., L.M.S.S.A. (LOND.) ருசூகூ

மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம் - புதுவை, வரத. வீரப்பன் ருஎரு

அறன் வலியுறுத்தல்! — தி. ச. வாசுதேவன் ருஅஉ

அருள் பத்து — கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர்,
ப. இராமநாத பிள்ளை ருஅங

“ஓடங்கள் ஆற்றில் ஓடுகின்றனவே!”
—வித்துவான், கோ. வே. பெருமாள்,
கோபாலசமுத்திரம் ருஅஅ

செய்திகளும் குறிப்புகளும் ருஅகூ

மதிப்புரை ருகூஉ

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1-140, பிராட்வே, சென்னை-1.

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ., வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல்., அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாத பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

செல்வி உறுப்பினர்கட்கு

இவ்விதழுடன் செல்வி இருபத்தைந்தாம் தொகுதி முடிவு பெறுகின்றது. அடுத்துவரும் ஆவணி இதழ் இருபத்தாறாம் தொகுதியின் முதல் இதழாகும். எனவே, அன்பர்கள் 26-ஆம் தொகுதிக்குரிய தங்கள் உறுப்பினர் கையொப்பத் தொகையினை ஆகஸ்டு இறுதிக்குள் அனுப்பியுதவவேண்டுகின்றேம்.

முன்பணம் அனுப்பாத அன்பர்கட்கு ஆவணி இதழ் ரூ. 4-6-0 க்கு வி. பி. வழி அனுப்பப்பெறும். அவர்கள், செல்வி நலங்கருதி அதனைப் பணஞ்செலுத்திப் பெற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றேம். தங்கள் நண்பர்கள் பலரையும் செல்வி உறுப்பினராகச் செய்து உதவவும் வேண்டுகின்றேம்.

செயலாளர்
செந்தமிழ்ச் செல்வி

பணமனுப்பவேண்டிய முகவரி :

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

Vol XXV. 1950—1951.

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

இருபத்தைந்தாம் சிலம்பு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.

ளளஞா ஆண்டு
௧௯௫௧—௧௯௫௨

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd
Thirunelveli. Madras.

All Rights Reserved] [*Price Rs.* 6-0-0.

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

EDITORIAL BOARD MEMBERS

க. திரு. ப. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி.ஏ பி எல்
(முதலேழு மாதங்கள்வரை தலைவர்) வழக்குரைஞர்,
நாகர்கோயில்

உ. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச்
செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

ங. ,, ‘சித்தாந்த கலாநிதி’ வித்துவான், ஔவை சு. துரை
சாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ச. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள்,
கோயமுத்தூர்.

ரு. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ,
வழக்குரைஞர், சாத்தூர்.

சு. ,, வித்துவான், மு. இராசக்கண்ணனார் அவர்கள்,
B O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

எ. ,, வித்துவான், பண்டித, கா பொ. இரத்தினம்
அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்), பி ஓ. எல்,
அரசினர் ஆசிரியப் பயிற்சிக கல்லூரி, கொழும்பு.

அ. ,, ‘சித்தாந்த பண்டிதர்’ ப. இராமநாத பிள்ளை
அவர்கள், கழகப்புலமையாளர்.

உள்ளுறை

	பக்கம்
அடிகளாரின் ஆற்றொணா இறுதி	௬௦
அடிகளாரின் சில கருத்துக்கள்	௧௧௮
அடிகளாரின் பிரிவும் தமிழகத்தின் கடமையும் —வித்துவான், சுந்தரராசன், சென்னை	௬௫
அடிகளார் பொன்மொழிகள்	௯௩
அந்தணன் புலவன்—புலவர், சி. சுப்பிரமணியன், கோவை	௧௨௯
அரவிந்தர் மறைவு—செல்லூர்க்கிழார்	௨௦௬
அருள் பத்து—சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாதபிள்ளை	௧௭௯, ௫௮௩
அற ஆட்சிக்கு அன்புமுறை—கௌசல்யா சோமசுந்தரம்	௩௪௫
அறன்வலியுறுத்தல் (இசைப்பாடல்)—தி. ச. வாசுதேவன்	௫௮௨
அறிஞர் திரு ஜார்ஜ் பெர்னாட்ஷா —சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாதபிள்ளை	௧௨௧
அறிவு—செல்லூர்க்கிழார்	௫௪௦
அன்பு—செல்லூர்க்கிழார்	௧௫௨
அன்னையின் ஆணை (கவிதை)—முத்தமிழ்மணி	௪௮௭
ஆண்மைச் சர்தார் —சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாதபிள்ளை	௨௦௯
இது தருமோ? (கவிதை)—புதுவை, முதுகண்ணன்	௪௭௪
இந்தி நல்லெண்ணத் தூதுக்குழு—இனியன்	௧௬௪
இரங்கல் (கவிதை)—செ. வேங்கடராமச் செட்டியார், S. V. O. கல்லூரி, திருப்பதி	௨௯௮
இருபத்தைந்தாவது ஆண்டு—ஆசிரியர்	௧
உடையார் கோவில் கல்வெட்டுக்கள்—வித்துவான், வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு	௪௮௯
உமாபதி தேவரான ஞானசிவ தேவர்—சித்தாந்த கலாநிதி, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை	௩௬௧
எண்பெரு நினைவாற்றல்—இனியன்	௩௦௨
எதிரிலிசோழச் சம்புவராயன்—சித்தாந்த கலாநிதி, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை	௨௧௭
எது வேண்டும்? (இசைப்பாடல்)—முத்தமிழ்மணி	௩௪[illegible]
எந்தையாரின் இறுதிநாட்கள்—சித்தாந்த தினகரன், வித்துவான், மறை. திருநாவுக்கரசு	௧௦௩

எந்நாளோ? (கவிதை)—நாஞ்சில், கா. கணபதி ௫௩௨
எம்முன் எழுந்தருளாய் (கவிதை)
—தென்கருணையூர், வேல்-இளவேந்தன் ௩௧௧
எழுத்து ஆக்கம்—மயிலை, சீனி. வேங்கடசாமி ௩௩௧
எனது கதிர்காமச் செலவு
—செல்வி. எஸ். கமலாதேவி, இரத்தினபுரி ௩௮௧
ஐந்திறம்—கணியர், டாக்டர், இ. மு. சுப்பிரமணியபிள்ளை ௧௬௯
ஓடங்கள் ஆற்றில் ஓடுகின்றனவே!—வித்துவான்,
கோ. வே. பெருமாள், கோபால சமுத்திரம் ௫௮௮
கடவுள்—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௮௮
கண்ணுதலைத் தொழும் அன்பு
—தமிழாசிரியர், சுந்தரகுமரன், புதுவை ௩௩
கதிரவனும் காலநிலையும்
—சு. குமாரசாமி ஆச்சாரி, பி. ஓ. எல்., மயிலம் ௨௭௫
கம்பநாடர் காலம்—தி. பொ. பழனியப்ப பிள்ளை, பி.ஓ.எல் ௧௫௩
கலைத் தாய் (கவிதை)—புதுவை, முதுகண்ணன் ௫௨௬
கலையின் வைப்பே! (கவிதை)—புதுவை, முதுகண்ணன் ௫௬௮
கவிமணி கண்ட பண்டிதமணி—ஆசிரியர் ௫௬௦
"கனித்தேன்!" என்றாள் (கவிதை)—முத்தமிழ்மணி ௫௧
காண்பதெங்கே? (வெண்பா)—இனியன் ௧௧
குடியரசுத் திருநாள் (கவிதை)
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௮௦
குமரகுருபரர் நல்கும் சமயவாழ்வு—சித்தாந்த கலாநிதி,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ௧௭
குறியா இழப்பு—ஆசிரியர் ௨௬௭
குற்றாலக் கொழுந்தமிழ்
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௩௬௩
கையறுநிலை (கவிதைகள்) ௧௦௫
கோயிலும் குளமும்—இராவ்பகதூர்,
சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல். ௨௨
சங்க இலக்கியங்களில் இல்லையா?
—சு. குமாரசுவாமி ஆச்சாரி, பி. ஓ. எல். மயிலம் ௪௮௧, ௫௦௫
சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினம்
—மயிலை, சீனி. வேங்கடசாமி ௪௨௭
சங்ககாலத்து மதுரை—மயிலை, சீனி. வேங்கடசாமி ௧௩௩
'சித்தாந்த வித்தகர்' மணிவிழா—சித்தாந்த பண்டிதர்,
புலவர், ப. இராமநாத பிள்ளை ௧௬௧
சித்திரைப் பெண் (கவிதை)—முத்தமிழ்மணி ௩௮௮
சில பேச்சு வழக்குகள்—பி. லூர்துசாமி, பி. எஸ்ஸி. ௩௭௧

செந்தமிழ்ச் செல்வி (கவிதை)—புலவர் 'அரசு' ௪௧

செய்திகளும் குறிப்புக்களும்—௫௩, ௧௨௦, ௧௬௦, ௨௦௭, ௨௫௬, ௩௦௩, ௩௪௯, ௩௯௮, ௪௪௬, ௪௯௪, ௫௪௩; ௫௮௯

"செல்லரித்தது"—திரு. சி. மகாலிங்கம் ௪௨௦

சேலங் கல்லூரித் தலைவர் திரு. அ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் —க. செ. ௩

சேலங் கல்லூரித்தலைவர் மறைவு—(ஆறுதலுரைகள்) ௧௨

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், மதிப்புரை மறுப்பு —ஞா. தேவநேயன் ௪௫௭

தமிழகம் வடித்த கண்ணீர் ௮௯

தமிழனும் நீ கொலோ? (கவிதை)—நாஞ்சில், கா. கணபதி ௪௯௩

தமிழில் நாவரப்பெயர்—கா. நல்லொளியன் ௧௪௪

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் —கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி. ௫௪௮

தமிழ் எழுத்து மாற்றம்—சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை ௫௪௫

தமிழ்க் காதல் (இசைப்பாடல்)—முத்தமிழ்மணி ௪௨௫

தமிழ்ச்சொல் (கவிதை)—கா. கணபதி ௨௨௫

தமிழ் நெடுங்கணக்கு-பெயரும் எண்ணும் —இராவ்சாகிப், சைவப்புலவர், டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை L.C.P.S., L.M.S.S.A., (Lond.) ௨௩௩, ௨௮௧, ௩௮௯, ௪௦௯, ௫௬௯

தமிழ்ப்பேராண்மைச் சிதம்பரனார்—சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர், ப. இராமநாத பிள்ளை ௩௫௩

தமிழ்மலை சாய்ந்தது (கவிதை) —புத்தனேரி, ரா. சுப்பிரமணியன் ௧௦௪

தமிழ்மொழி (கவிதை)—கா. கணபதி ௨௮௭

தமிழ் வளர்ச்சிக் கழக நான்காவதாண்டு விழா—கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை ௪௪௯, ௪௯௭

தரும சங்கடம்—வித்துவான், ஆ. சிவலிங்கனார் ௪௨

தனிப்பெரும் புலவர் சலசலோசனர்—சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை ௨௫௭

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் —தி. பொ. பழனியப்ப பிள்ளை, பி. ஓ. எல். ௩௨௬

திரு. புகழ். முத்துசுவாமிப் பிள்ளை—இனியன் ௨௫௩

திருப்பாவை ஆராய்ச்சி—பேராசிரியர், கா. ர. கோவிந்தராச முதலியார் ௨௪௫, ௪௧௫

தேவாரப் பண் ஆராய்ச்சி
—புத்தனேரி, ரா. சுப்பிரமணியன் உருரு

தேவாரமும் பண்ணும்—தணிகைமணி, இராவ்பகதூர்,
திரு. வி. எஸ். செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. உஙசு

நாஞ்சில் வள்ளுவன்—வித்துவான், கு. நாராயணன் ருகஎ

நாவன்மைமிக்க சி. ஆர். இரெட்டி—சித்தாந்த பண்டிதர்,
கழகப் புலவர், ப. இராமநாத பிள்ளை ஙருஎ

நான் கண்ட பெருந்தமிழன்—மயிலை, சீனி. வேங்கடசாமி உ0க

நிலைபெற்ற தமிழ்மலை ருஎ

நுண்ணறிவு—இனியன் கருஅ

நூலகம்—இனியன் ங00

நெருஞ்சி—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை
சசுசு, ருஉக

படர்க்கை 'இ' விகுதி—பண்டித புலவ வித்துவான்,
ஞா. தேவநேயன், எம்.ஏ., ருசுக

பணி மதி! (கவிதை)
—வித்துவான், புதுவை, முதுகண்ணன் உ0ரு

பண்பு—செல்லூர்க்கிழார் ருஙக

புதிற்றுப்பத்து
—வித்துவான், மு. த. வேலாயுதனார், புதுவை உசுரு

பம்மல் விசயரங்க முதலியார்—சித்தாந்த பண்டிதர்,
கழகப்புலவர், ப. இராமநாத பிள்ளை ச0எ

பரிமேலழகர் உரை—செல்வி. எஸ். கமலாதேவி ருஉஎ

பாணர் கைவழி
—திருமந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனார் ககூங

பாணர் கைவழி மதிப்புரை (மறுப்பு)
—புலவர், ஞா. தேவநேயப்பாவாணர் உஉஎ, உஅகூ

பாண்டியன் சடில பராந்தகன்—சித்தாந்த கலாநிதி,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ருருங

பாரதிதாசனர் வெள்ளணிவிழா
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை சசச

புலவர்ப் போற்றல்—சித்தாந்த பண்டிதர்,
புலவர், ப. இராமநாத பிள்ளை ங0ரு

புலவர் மாணவர் தேர்வுத் தகுதி விளக்கம்
—தென்னிந்திய தமிழ்ச் சங்கம் சசக

பெயர் அணி விழா அழைப்பு (கவிதை)—தி. கலைமணி ஙஙசு

பெரும்புலவோர் பரிவு எரு

பேரறிஞர் பழநியப்ப பிள்ளை—இ. ஆறுமுகம், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், திருவேங்கடவன்
கீழ்க்கலைக்கல்லூரி, திருப்பதி ஙஉக

பொங்கற் புதுநாள் வாழ்த்து
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௩௮

பொங்குக பொங்கல்! (கவிதை)—முத்தமிழ்மணி ௨௪௪

பொது நெறி—இனியன் ௩௦௧

பொன்மொழிகள்—மறைமலையடிகள் ௨௦௨

போமோ துன்பம்? (கவிதை)—புதுவை, முதுகண்ணன் ௨௨௬

போர் நிகழாமற் காத்த புலவர்
—சு. அ. இராமசாமிப் புலவர் ௧௪

மதிப்புரை ௧௫௬, ௨௦௮, ௩௫௧, ௫௪௨, ௫௬௨

மறைமலை தந்த செல்வம்—க செ. ௧௧௩

மறைமலையடிகள்—செய்தித்தாட் குறிப்புக்கள் ௨௦௩

மனோன்மணீயம்—தமிழாசிரியர், A. மகாலிங்கம் ௪௭௫

மாலைப் பொழுதிலே
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௧௮௫

முத்தமிழ்—பன்மொழிப்புலவர்,
கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி. ௪௬௫

முத்தமிழ்விழா வரவேற்புரை—திரு. கா. பொ. இரத்தினம்
அவர்கள், பி ஏ., (ஆனர்ஸ்), பி. ஓ. எல். ௩௩௭

முதுதமிழ்ப்புலவர், மு நல்லதம்பி அவர்களின் பெரும் பிரிவு
—வீர சோமு. அரப்ப செட்டியார் ௫௧௩

முருகு—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௮

மெய்யுணர்வுச் செல்வர் காஞ்சி, நாகலிங்க முனிவர்
—சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை ௪௦௧

மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம்
—புதுவை, வரத. வீரப்பன் ௫௩௩, ௫௭௫

மொழியாராய்ச்சி—அ. நக்கீரர் ௩௧௩

வசந்த குசுமாகர மாத்திரை—மயிலை, சினி. வேங்கடசாமி ௫௪௧

வரவேற்பு வாழ்த்திதழ்
—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ௨௭௩

வளமிகு செல்வம்—நாஞ்சில், சா. கணபதி ௫௫௨

"வாழ்க!" என்றுள் (கவிதை)—முத்தமிழ்மணி ௧௬௬

வாழ்க்கைப் பயன்—இனியன் ௪௦

விண்ணப்பம்—தென்இந்திய சித்த வைத்திய சங்கம் ௪௩௮

விலங்குகளின் தோற்றம்—N. K. வேலன் ௪௬

படங்கள்

		பக்கம்
1.	காஞ்சி நாகலிங்க முனிவரர்	௪௦௧
2.	சங்க காலத்துக் காவிரிப்பூம்பட்டினம்	௪௨௬
3.	சங்ககாலத்து மதுரை	௧௩௩
4.	சர்தார் வல்லபாய் படேல்	௨௦௯
5.	சித்தாந்த வித்தகர் குமாரவேல் பிள்ளை	௧௬௧
6.	சி. மு. கோவிந்தராச முதலியார்	௧௨௮
7.	தனிப்பெரும் புலவர் சலசலோசனர்	௨௫௭
8.	தி. ப. சுப்பிரமணிய தாஸ் அவர்கள்	௩௦௨
9.	தி. பொ. பழனியப்ப பிள்ளை	௨௯௭
10.	திரு. அ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள்	௧
11.	திரு. ப. சிதம்பரம் பிள்ளையவர்கள்	௩௫௩
12.	பேரறிஞர் பெர்னார்ட்ஷா	௧௨௧
13.	பேராசிரியர் மறைமலையடிகள்	௫௭
14.	மறைதிரு. மறைமலையடிகளார் (பல்வேறு படங்கள்)	௬௪



சிலம்பு உரு | திருவள்ளுவர் ஆண்டு ககூஅஉ, ஆடி
ஆகஸ்ட், 1951 | பரல் கஉ

தமிழ் எழுத்து மாற்றம்

தமிழெழுத்துச் சீர்திருத்தம் என ஒரு பொருந்தாக் கொள்கையை அரசியலார் மக்கள்மேல் திணித்துள்ளனர். பன்னூறாண்டுகளாகத் தன்னிற் செம்மையுற்று உலக வழக்கினும் நூல் வழக்கினும் ஒப்ப உலவிவரும் தமிழெழுத்துக்களை வரிவடிவில் மாற்றம் செய்யவேண்டிய இன்றியமையாமை என்னென வுன்னவு முடியவில்லை. செய்தித்தாள்களுக்கும் கைப்பொறி எழுத்திற்கும் சிறிது வாய்ப்பு ஏற்படலாம் என்னும் ஒருசிறு நோக்கங்கொண்டு செய்வதாயின் பரந்துபட்ட தமிழகத்தும் தமிழ்மக்கள் குடியேறி வாழும் இலங்கை, பர்மா, சயாம், மலாயா முதலிய வெளியுலகத்து நிறுவி உள்ள அச்சுக்கூடங்களுக்கும், ஆங்காங்கு உருவாகி அமைந்து பயன்பெற்று வரும் அச்செழுத்துக்களுக்கும், அவ்வெழுத்துக்களைக் கோக்கப் பயின்று வழிவழியாக அச்சியற்றிவரும் அலுவலாளர்கட்கும் எத்துணை அல்லல் ஏற்படும் என்று ஒருசிறிதும் உன்னியதாகத் தெரியவில்லை. மேலும்,

பள்ளிக்கூடங்களில் பயிற்றுவிக்கும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியன்மார், பயின்ற மாணவர்கள், உலகத்து மக்கள் சீர்திருத்த முறைப்படியுள்ள வெளியீடு முதலியவற்றை யாங்ஙனம் புரிந்துகொள்வர்? அவர்கள் எல்லாரும் துவக்கமுதல் படித்துணர்வதா? அந்தோ! ஏழைத் தமிழகத்து ஆர்வமேலீட்டால் தத்தம் சிறு வருவாயில் மிகநெருக்கிப் பல்லாண்டுகளாகத் தொகுத்த கோடிக்கணக்கான பொருள்மதிப்புள்ள நூல்நிலையங்களில் இருக்கும் நூல்களும், தனிப்பட்டவர்கள் இல்லங்களில் விளங்கும் நூல்நிலையச் சுவடிகளும் பின்னுள்ளார் பயன்பெற வாய்ப்பின்மையால் கொன்னே கழிந்தொழிவனவா? நூல்

களைப் பதிப்பித்து விற்பனையாக்கும் வெளியீட்டாளர்கள் கையி ருப்பில் விலைப்படாமலிருக்கும் நூற்களை என்செய்வது? திருத்த முறைப்படி நூற்கள் வெளிவருமேல், பழைய நூற்களை எவர்தாம் வாங்க விரும்புவர்?

தொழில் துறைகளில் அமைத்திருக்கும் விளம்பரப் பலகை கள், நிலையங்கள், இல்லங்கள் முதலியவற்றில் பொறித்திருக்கும் பெயர் வரிசைகள் இவற்றையெல்லாம் மாற்றுவதா? அன்றேல் இருவகை வடிவும் ஒருங்கமைப்பதா? மாற்றுவமேல் பழைமை வரிவடிவு கற்றார்க்குப் புரியாது. ஒருங்கமைப்பதேல் இரட் டிப்புச் செலவாகும். இம்முறையே அழைப்பிதழ், வரவேற்பு முதலியன இருவேறு வடிவிலும் இயங்குதல் இன்றியமையாதன வாகும். இவற்றானெல்லாம் எத்துணை இடர்ப்பாடு வந்து எய்துகின்றதென்பதை மக்களால் ஏற்படுத்தப்பட்டு மக்கட் பொறுப்பினராய் மக்கட்கெனவே மாநிலங்காக்கும் அரசியலார் மனங்கொண்டு ஆழ்ந்து எண்ணுதல் வேண்டும்.

எவ்வகைத் திருத்தமும் பெருமக்களை மேவி அவர் தம் அருங்கருத் தொருப்பாட்டுடன் அமைப்பதே அறிவும் அற முறையும் ஆக்கமுமாகும். நாட்டுக்கு உயிர்நாடிபோன்ற மொழிபற்றிய எனைத்துத் திருத்தத்தும் மொழித்தொடர்புடை யார் எல்லாரிணக்கத்தையும் பெற்றிருக்கவேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்.

கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், கணக்காயன்மார், எழுத் தாளர்கள், விழுத்தகு புலவன்மார், அச்சகத்தார், அச்செழுத் துருவாக்குபவர், புத்தக வெளியீட்டாளர், விற்பனையாளர் முத லிய அனைவர்களையும் ஆங்காங்கு உசாவுதற்பொருட்டுத் தக்கார் வாயிலாகப் பெருங்கூட்டங்கள் கூட்டுவித்துத் திருத்தத்தால் வரும் நன்மை தீமைகளை நன்றாகநாடுவித்து அதன்மேல் அன்ன வர் தம் ஒருங்கியைந்த உளக்கருத்தை ஒன்றுதிரட்டி, பின்னர் அமைதியா யாராய்ந்து வாய்ப்பன செய்தலன்றோ நேர்மையாம்.

மேலும், உண்மையாகவே தமிழுக்கெனவே தொண்டாற்றி வரும் "தென்னிந்திய தமிழ்ச்சங்கம்," "தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்," "கரந்தைத் தமிழ்ச்சங்கம்," "சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்," போன்ற பல்வேறு சங்கங்களின் கருத்துக்களையும் கால வாய்ப்புக்கொடுத்துத் தெரிந்து தெளிதல்வேண்டும். வணி கத்துறையில்வணிகத்துக்கெனவே அச்சியற்றப்பட்டு உலவிவரும் சுவடிகள், அட்டைகள், மேற்பொதியும் தாள்களில் விளக்கம் பொறித்துள்ள சுற்றுக் கடிதங்கள், மருத்துவர்கள் மருந்துக் குப்பி முதலியவற்றில் ஒட்டும் சீட்டுக்கள், விளக்கங்கள்,

நாட்டாண்மை, நகராண்மை, ஊர்மன்றம் முதலியவற்றில் வழங்கிவரும் ஊர்ப்பெயர் தெருப்பெயர் பொறித்த பலகைகள், செயன்முறைத் தாள்கள், போக்குவரத்துக்கு வாய்ப்பாகிய பொறியூர்திகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள், அவர்கள் பெறும் கட்டணங்களுக்காகக் கொடுக்கப்படும் பற்றுச் சீட்டுக்கள், அட்டைத் துண்டுகள் இவைகள் எல்லாம் மாற்றப் படுவதாயின், எத்துணைப் பொருளிழப்பும் காலக்கழிவும் வீண் இடர்ப்பாடுகளும் நேரும் என்பதை நினைத்தல்வேண்டும்.

பண்டையோர் கைச்சாத்திடும் எழுத்துக்களின் மாறுதல் களினால் ஆவணம் முதலியன பதியும் பதிப்பகங்களிலும், கொடுக்கல் வாங்கல் செய்யும் வட்டிக்கடை முதலிய நிலையங் களிலும், புதிதாக வரும் எழுத்தாளர்களும் அலுவலாளர்களும் எங்ஙனம் கண்டு தெளிந்து வல்விரைந்து தொழிலாற்றுவர். மேலும் அரசியல் முறைகள் நாட்டு மொழியாகிய தாய் மொழி யிலேயே நடக்கவேண்டியது கடமையும் முறைமையுமாக விருப்ப தால் சீர்திருத்தப்படிக்குள்ள கட்டளைகளை முதியவர்கள் எப்படி உணர்ந்துகொள்வார்கள். ஒலிவடிவுக்கேயன்றி வரிவடிவுக்கும் இலக்கணமுண்டு. அஃதென்னவது?

சித்திரகவிப் புலவர்கள் வரிவடிவுகளையே பொருளாக வமைத்துப் பல செய்யுட்கள் பாடியுள்ளார்கள். இப்பொழுது சிலர் கருதுவதுபோன்று வரிவுவடிவுமாற்றமுறுமேல் அச் செய்யுள்களுக்கெல்லாம் பொருள் காண்பது எங்ஙனம்?

இப்பொழுது சென்னைமாகாண அரசியல் தனித்தமிழர் அரசியலாக இல்லையென்பது வெளிப்படை. தெலுங்கர், மலை யாளர், கன்னடர் முதலியோர் சேர்ந்த மொழிக்கூட்டு அரசி யல். இந்நான்மை மொழிக்கூட்டில் ஏனைமொழியாளர்கள் கொள்ளாத, ஏனைமொழிகளைச் சீர்திருத்தவுன்னாத நிலையில் தமிழ்ச் சீர்திருத்தத்திற்குமட்டும் இத்துணை விரைவு ஏனோ? மக்களை மதித்து மக்கள் மதிப்பைப் பெறுவதன்றோ மாண்பாகும்.

அஃதன்றி இவ்வாறு எண்ணாது செய்யுஞ் சீர்திருத்தங்கள் மொழிவளர்ச்சிக்கு நன்மை தருவதற்கு மாறாக அத்துறையிற் பெரியதோர் குழப்பமான சூழ்நிலையையே தோற்றுவித்துத் தீமையே விளைவிக்குமன்றோ? எனவே, அரசினர் மீண்டும் நன்கு சிந்தித்து இத்தகைய அரைகுறைத் திருத்தங்களால் தமிழ்மொழி வளர்ச்சியினை மேலுந் தடை செய்யாதிருத்தலே நேர்மையாகும்.

தமிழன்பர்களனைவரும் இதனை வலியுறுத்தித் தங்கள் கருத் தினை அரசினர்க்கறிவித்து ஆவனசெய்ய வேண்டுகின்றோம்.

கழகப் புலவர், ப. இராமநாத பிள்ளை.

தமிழ் வாழ்க

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

[கா. அப்பாத்துரை, எம். ஏ. எல். டி., விசாரத்.]

தமிழ் எழுத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று சிலநாளாக இரண்டு மூன்று பத்திரிகைகளும் அவற்றின் ஆதரவாளரும் பிரசாரம் செய்து வந்துள்ளனர். இவற்றுள் திராவிட கழகப் பத்திரிகையாகிய 'விடுதலை' குறிப்பான சில திருத்தங்களைச் செயல் முறையில் கையாண்டு காட்டி வருகிறது. மற்றொரு பத்திரிகை. ஆங்கிலப் பத்திரிகையாகிய 'மதராஸ் மெயில்.' இதன் குறிக்கோள் தமிழ் எழுத்தைச் சீர்திருத்துவதன்று. ஆங்கில எழுத்து என்று கூறப்பட்டுவரும் உரோம எழுத்தைத் தமிழில் மேற்கொள்வது. மூன்றாவது பத்திரிகை சுதேசமித்திரன். இது சில எழுத்துமாறுபாடுகளுடைய ஒரு புது இயந்திரத்தை வரவழைத்துக்கொண்டு, அதன் எழுத்தைப் பரப்புவதன்மூலம் தன் தொழிலாதிக்கத்தை நாட்ட எண்ணுகிறது. அதோடு அப்பத்திரிகையைச் சார்ந்த குழுவே அந்த இயந்திரத்தின் இறக்குமதி உரிமையை வைத்துக்கொண்டிருப்பதால், இச்சீர் திருத்தத்தின்மூலம் தமிழக வாழ்வின்மீது புதுத்துறைகளிலும் ஏகபோக உரிமைபெற அக்குழு திட்டமிடுகிறது.

அரசியலார் புதிய சீர்திருத்தமொன்றை நடப்புக்குக் கொண்டுவந்து வலியுறுத்தப்போவதாகவும், அதில் 91 எழுத்தே இருக்கும் என்றும் அறிவித்துள்ளனர். இச்சீர்திருத்தம் உண்மையில் மேற்கூறிய மூன்றில் சுதேசமித்திரன் நாடித்துடிப்புடன் எதிர்பார்த்திருக்கும் சீர்திருத்தமே. அது தமிழர் எழுத்துமுறையை மட்டும் சீர்திருத்துவதல்ல. தமிழர் வாழ்விலேயே ஒரு சிறு முதலாளித்துவக் குழுவுக்கு ஏகபோக உரிமை வாங்கிக் கொடுத்து, அவர்கள் கையில் தமிழகத்தின் கழுத்தை ஒப்படைக்கும் திட்டம் என்று கூறத்தேவையில்லை.

மற்ற இரண்டு பத்திரிகைகளும், நோக்க வேறுபாடு உடையவையாயினும் பொதுமக்கள் மனத்தைக் குழப்பிச் சுதேசமித்திரன் சுரண்டல் ஏகபோகக் கொள்கைக்குத் தெரிந்தோ தெரியாமலோ, தன்னலம் பேணியோ, பேணாமலோ மக்களைத் தூண்டுபவையாக உள்ளன. என்வே, தமிழ்மக்கள் முன்னிலையில் இதுபற்றித் தமிழ்ப்புலவர் சார்பிலும் தமிழன்பர் சார்பிலும் எம் எச்சரிக்கையைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழ் எழுத்தைச் சீர்திருத்த வேண்டுமா ?

உலகில் எழுத்துமுறை உடைய மொழிகள் மிகமிகச் சில. மேனாட்டு மொழிகள் முழுவதற்கும் பெரும்பாலும் ஒரேபொது எழுத்து முறைதான் உண்டு. அது இலத்தீன் எழுத்து முறை. வட இந்திய மொழிகள் அனைத்துக்கும் ஒரே பொது எழுத்து முறைதான் உண்டு. இதுவும் தமிழைப் பின்பற்றிக் கிரந்தம் என்ற வடிவில் அதன் திரிபாகிய நாகரி வடிவில் திகழ்கிறது. எனவே, உலகில் தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் இன்று தனக்கெனத் தனி எழுத்துமுறை உண்டு இம்முறை ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டதானாலும், இன்றும் உலகின் தலைசிறந்த எழுத்துமுறை ஆகவே கருதத் தகுதி உடையதாயிருக்கிறது. மெயில் பத்திரிகை தழுவப்பார்க்கும் மேனாட்டு (ஆங்கில) எழுத்துமுறை இதற்கு ஒருசிறிதுகூட ஈடல்ல. ஏனெனில் அது தமிழைப்போல ஒரு எழுத்துக்கு ஒரு ஒலி, ஒரு ஒலிக்கு ஒரு எழுத்து என்ற திட்டமோ, எழுத்து ஒழுங்குமுறையோ உடையதல்ல. உண்மையில் உலக எழுத்து முறைகளில் கடைகெட்ட காட்டுமிராண்டி எழுத்துமுறை ஆங்கில எழுத்துமுறையே என்பது உலக மொழி அறிஞர்தம் திரண்டகருத்து.

இவ் வெட்கங்கெட்ட நிலையை மாற்றும் எண்ணத்துடனேயே காலஞ்சென்ற அறிஞர் பெர்னார்டுஷா, ஆங்கில எழுத்துச் சீர்திருத்தத்துக்கு என நூறாயிரம் பொன்னுக்குமேல் வைத்துச் சென்றிருக்கிறார்.

தமிழ் எழுத்துமுறை வடநாட்டின் மொழிகளுக்குப் பொது எழுத்து முறையான வடஎழுத்து முறையைவிட எல்லாவகையிலும் மேம்பட்டது. தமிழில் தனி எழுத்துக்கள் 31. கூட்டெழுத்துக்களைக் கணக்கிட்டு உட்படுத்தினால் இத்தொகை 247. ஆனால் அச்சுக்கான உருவங்கள் இவற்றுக்கு 127 போதும்.* இதற்கு நேர்மாறாக வடமொழி, இந்தி, வங்காளி, ஆகிய வடபால் மொழிகளிலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென்பால் தமிழின மொழிகளிலும் இத்தொகை ஆயிரத்துக்கு மேற்படுகின்றன.† ஆங்கிலத்தில்கூட அச்சு பெரிது 26, அச்சு சிறிது 26, இத்தாலியக் கைஎழுதது பெரிது 26, ஷை சிறிது 26 என 104 எழுத்துக்கள் உள்ளன. அச்சிலும் இவை தேவைப் படுகின்றன.

---

* உயிர் 12. மெய்ஒற்று 18. ஆய்தம் 1. ஒற்று நீங்கிய மெய் அச்சு வடிவம் 18; ா, ெ, ே, ை ஆகிய உருக்கள் 4; உயிர்மெய் இ, ஈ, உ, ஊ வடிவங்கள் 72; ணா, றா, னா, ணை, லை, ளை, னை ஆன 7—ஆக 127.

† உயிர் 16, மெய் 53, உயிர்மெய் 548, கூட்டெழுத்து ஆயிரக் கணக்கில்.

எனவே, தமிழ் எழுத்துமுறை சீர்திருத்தக்கூடியதாயிருக்கலாமானாலும், பிற எந்த மொழியின் சீர்திருத்த அவசியத்தையும்விடக் குறைந்த சீர்திருத்த அவசியம் உடையதேயாகும் என்பது ஒருதலை. இன்று வட இந்திய மொழிகளின் சீர்திருத்தத்தை எந்த அரசாங்கமும் மேற்கொள்ளவில்லை. சென்னை அரசாங்கம்கூட, தன் ஆட்சியில் உள்ள பிற தென்பாலைய மொழிகளைத் தமிழினும் சீர்கேடுடைய நிலையில் வைத்துக்கொண்டே தமிழை மட்டும் சிர்திருத்த விரைகின்றது என்பது காணத்தக்கது. இதுவரை மொழிவாரி மாகாணம், கல்விக்கொள்கை, ஆகிய எதிலும் தமிழகத்தின் பெயரைக்கூடத் தீண்ட முடியாத ஆட்சியாளர், இந்த ஒரு துறையில் மட்டும் தமிழகத்தைத் திருத்தக் கச்சைகட்டி விரைவானேன்? இதில் ஏதோ 'சோழியன் குடுமி'யின் சூழ்ச்சி இருக்கிறது எனத் தமிழர் எண்ணுமலிருக்க முடியுமா?

உண்மைச் சீர்திருத்தம் யாது?

தமிழின் தனி எழுத்துக்கள் 31 மட்டுமே. இவற்றுக்குத் தமிழ்ப் பண்பை ஒட்டித் தனி வடிவு வரையறுத்துவிட்டால், அச்சீர்திருத்தம் சீர்திருத்தம் மட்டும் அல்ல, பழந்தமிழ்ப் பண்பும் ஆகும். உலக மொழிகளில் தமிழ் இருப்பதைவிடச் சிறப்புப்பெறும்.

அத்துடன் காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் சுட்டியபடி குறுகிய உ, குறுகிய மகரம் ஆகியவற்றைச் சேர்த்தால் தமிழுக்கு மட்டுமன்றி உலக மொழிகளனைத்துக்குமாகிய தலைசிறந்த எழுத்துமுறை அமையும்.

தமிழ்ப்பற்றுடைய, தமிழறிவும், வரலாற்று மொழியாராய்ச்சியறிவும் உடைய தமிழர் முனைந்தால் இத்தகு சீர்திருத்தம் நிறைவேறலாம். அத்தகையோர் பக்கம் அரசியலின் பாசம் திரும்புமா?

சீர்திருத்தம் செய்யும் தகுதியுடையவர் யார்?

தமிழ் சார்ந்த எந்தச் சீர்திருத்தத்திலும் முதல் தகுதியும் முதல் உரிமையும் உடையவர் தமிழ்ப் புலவர்களே யாவார்கள். தமிழ்ப் புலவர் மாநாடு கூட்டி, தலை சிறந்த தமிழ்ப்புலவர் தலைவரும் தமிழகத் தலைவருமான (காலஞ்சென்ற) மறைமலை யடிகளார், உயர்திரு. சோமசுந்தர பாரதியார், தமிழ்ப் பெரியார் திரு வி. க. ஆகியவர்கள் தலைமை அல்லது முகமையில் இது நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனல், இச் சீர்திருத்தத்தில் முனைந்த

வர்களில் தமிழ்ப்புலவர் மருந்துக்குக்கூடக் கிடையாது. தமிழறிவிலும் தமிழ்ப் பற்றிலும் பிற்பட்டவரே இதனைத் தூண்டினர் என்றல் தவறாகாது. ஏனெனில் தமிழகத்தின் தலைசிறந்த புலவரேறு மறைத்திரு. மறைமலையடிகளார் உயிருடன் இருக்கும்போதே அவர் தலைமையின்றியும் அவருடன் கலவாமலும், அவர் கருத்துரை கோராமலும் அவர் சீடர்கள் எவரின் ஒத்துழைப்பு மில்லாமலும் செய்யப்பட்ட சீர்திருத்தமே இது.

அதுமட்டுமா? நாவலர் சோமசுந்தர பாரதியாரால் கண்டிக்கப்பட்ட சீர்திருத்தம்—தமிழ்ப்பற்றிலும் தமிழகப்பற்றிலும் தலைசிறந்த கட்சித் தலைவருள் ஒருவரான கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வன்மையாக எதிர்த்துவரும் சீர்திருத்தம் இது.

தமிழுக்காக உழைத்த, உழைத்துவரும் தலைசிறந்த சங்கங்களுள் ஒன்றேனும் இதில் கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது. கரந்தைத் தமிழ்ச் சங்கம், தென்இந்திய தமிழ்ச்சங்கம், தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம் முதலியவற்றின் பெயரில்லாத தமிழ் இயக்கம் தமிழர்களின் இயக்கம் அல்ல என்று கூற வேண்டுமா? இவையன்றி மதுரைத் தமிழ்ச்சங்கம், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் ஆகியவர்கள் கருத்துரைகளும் கோரவே படவில்லை.

எழுத்துச் சீர்திருத்தத்துக்கென்று தனிமாநாடு கூட்டி, அதன் உட்கூறுகப் புலவர் மாநாடுகள், தமிழர் மாநாடுகள், அச்சக உரிமையாளர், தொழிலாளர் மாநாடுகள் முதலியவற்றின் கருத்தறிந்தும், தமிழ்ச்சங்கங்களின் பேராட்கள் கலந்தும் செய்யப்படும் சீர்திருத்தந்தான் தமிழகத்தால் வரவேற்கத்தக்கது.

இறுதியாகத் தமிழொடு பிறமொழி நாடுகளடங்கிய சென்னை அரசியல் தமிழ்மீதுமட்டும் இத்தாக்குதல் 'ஏன்? ஏன்? ஏன்?' என்று தமிழகம் கேள்விக்குரல் முழக்கக் கடமைப் பட்டுள்ளது.

வளமிகு செல்வம்

[நாஞ்சில், கா. கணபதி.]

(1) அன்பினைக் குழைத்துச் சேர்த்து
அறிவினைத் தேக்கி நாளும்
துன்பினை வராமல் இன்சொல்
தோய்ந்திடு மழலைப் பேச்சால்
இன்பமே துளித்துச் சேர்க்கும்
எழில்மிகு குழந்தைச் செல்வம்
மன்பதைச் செல்வம் என்றால்
மற்றுமொன் றுண்டோ வம்ம !

(2) காகத்தை அழைக்கும் போதிற்
கரும்பென உருக்கும் தேறல்
ஆகத்தை நனைக்கும் ; அங்கை
அலகிட்டு அடித்துக் கொஞ்சி,
ஊகத்தைத் திகைக்க வைத்து
ஒருதனி அழகாய் நின்று
மாகத்து மதிகைக் கேட்கும்
மகிழ்வினை ஒப்ப துண்டோ !

(3) வாழ்க்கையில் வரையாச் செல்வம்
வருகைதந் தினிக்கும் செல்வம்
வாழ்வுக்கோர் வரையாச் செல்வம்
வறுமையு மறியாச் செல்வம்
வாழ்க்கையே மணக்கும் செல்வம்
வளரொளி பரப்பும் செல்வம்
வாழ்க்கையை உணர்த்தும் செல்வம்
வரவென வாராச் செல்வம்.

(4) வாழ்வினை வளர்க்கும் செல்வம்
வையகம் போற்றும் செல்வம்
ஆழியிற் பெரிய செல்வம்
அன்புசேர் பண்புச் செல்வம்
வாழியென் றேத்தும் செல்வம்
வாளொளி வார்க்கும் செல்வம்
வாழியின் அமுதச் செல்வம்
"வளமிகு குழந்தைச் செல்வம்."

பாண்டியன் சடில பராந்தகன்

[சித்தாந்த கலாநிதி, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை]

சங்க இலக்கிய காலத்துக்குப்பின் பாண்டிநாட்டில் களப்பிரர் என்றொரு கூட்டத்தார் வடநாட்டிலிருந்து கங்கநாடு கொங்கு நாடுகளின் வழியாகப் பாண்டிநாட்டுட் புகுந்து பாண்டிநாட்டின் தமிழ்ப் பண்பாட்டைச் சீர்குலைத்தனர். பண்டு தொட்டே சிவநெறியில் சிறந்து நின்ற பாண்டிவேந்தர் குடிமரபில் வேற்று நெறிகள் புகுந்தன; தமிழ் நூல்கள் பல அழிந்தன; தமிழியலும், தமிழ் இசையும் தமிழ் நாடகமும் தலைதடுமாறின; தமிழ் வல்ல சான்றோர் மறைந்தனர்; இந்நிலையைக் கூற வந்த **பாண்டியர் வரலாறு** என்னும் நூலுடையார், "இக்களப்பிரரது படையெழுச்சியினால் மதுரைமாநகரில் தமிழாராய்ச்சி செய்துகொண்டிருந்த கடைச்சங்கமும் அழிந்துபோய்விட்டமை அறியத்தக்கது; களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளுள் இதனினும் கொடியது வேறில்லையென்று கூறலாம்; எனவே, இவர்களது ஆட்சிக்காலம் ஓர் இருண்ட காலமாகும்," (பக். 37) என்று மனங்கரைந்து கூறுவது அறிஞர்கள் அறியவேண்டியதொன்று.

செந்தமிழ்ப் பாண்டி வானத்தில் புதிது பரவிய களப்பிர இருளைக் கிழித்துக்கொண்டு பலர் புகழ் தமிழ் ஞாயிறு தோன்றுங் காலத்தைத், தமிழகம் எதிர் நோக்கித் தவங்கிடந்தது. கி. பி. நான்காம் நூற்றாண்டில், பண்டைத் தமிழகத்தின் இருள் கடிந்து எழுதரும் ஞாயிறுபோலப் பாண்டி வேந்தர் சிலர் தோன்றிப் பாண்டியரது பண்டைப் புகழை நிலைநாட்டுவாராயினர். இறைவன் விழி மூன்றினுள் பாண்டியர் நெற்றி விழி போலும் மேன்மையுடையரென்ற கருத்துப்படக், "கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல, வேந்து மேம்பட்ட பூந்தார்மாற," (புறம்: 55) என்று சங்ககாலச் சான்றோர் கூறுவது காணலாம்.

களப்பிரர்க்குப் பின்பு தோன்றிய பாண்டி வேந்தருள் கடுங்கோன் என்பவன் தலைசிறந்தவனாவன். மதுரையிலிருந்து முதற்சங்கத்தைப் புரந்த பாண்டி வேந்தருள் கடுங்கோன் என்பான் ஒருவன் உண்டு. அவன் கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டு முன்பிருந்தவன். இக்கடுங்கோன் கிறித்து பிறந்தபின் நான்கு நூற்றாண்டு கழிந்து தோன்றியவன். சிலர் இருவரையும் ஒருவனாகக்கொண்டு தடுமாறுவர்; உண்மையறிவாராய்ச்சியுடையோர் அவர் கூற்றைக்கொள்ளமாட்டார்கள்.

களப்பிராது கலியிருள் கடிந்த கடுங்கோன் மிக்க சிறப்புடையவன்; அவனை வேள்விக்குடிச் செப்பேடுகள்,

"களப்பிர னென்னும் கலியரசன்
கைக்கொண் டதனை இறக்கியபின்
படுகடல் முளைத்த பருதி போல்
பாண்டி யாதிராசன் வெளிப்பட்டு
விடுகதிர் அவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக்
கோவும் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழல்
தங்கொளி நிறைந்த தாரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கனம் அமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த
கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்,"

என்று சிறப்பித்துக் கூறுகின்றன.

இக்கடுங்கோவின் வழிவந்த வேந்தருள் அரிகேசரி பராங்குசவன்மன் என்பவன் ஒருவனாகும். அவன் அக்காலத்தே கங்கநாட்டை யாண்ட வேந்தன்மகள் பூசுந்தரி என்பவளை மணந்துகொண்டான். அவனுக்கு அவள் வயிற்றிற் பிறந்தவன் நம் சடில பராந்தகன். இவனுக்கு நெடுஞ்சடையன் பராந்தகன் என்றும் பெயர் வழங்குவதுண்டு. இவன் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதுரையில் இருந்து ஆட்சி செய்தான்.

இப் பராந்தகனுக்கு முன்னும் பின்னும் வந்த பாண்டி வேந்தர் பலரும் சைவராக இருப்ப, இவன்மட்டும் திருமால்பால் பேரன்பு பூண்டொழுகினான். அந்நாளில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த வைஷ்ணவப் பெரியரான பெரியாழ்வார் இப்பாண்டியனுக்கு ஞானாசிரியராக விளங்கினார். சீவரமங்கலத்துச் செப்பேடுகள் இவனை, "பரம வைஷ்ணவன்" என்று பாராட்டுகின்றன. பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலைப் பதிகத்தில் இப்பாண்டியனைப் பாராட்டிச் சிறப்பித்திருக்கின்றார்.

இவ்வாறு "பரம வைஷ்ணவ"னாக இவ்வேந்தன் விளங்கிய போதும் சைவ சமயத்தின்பால் காழ்ப்பின்றி ஒத்த மதிப்பளித்தொழுகினான். கோயன்புத்தூருக் கண்மையிலுள்ள பேரூருக்குக் காஞ்சிவாய்ப் பேரூர் என்றும் பெயருண்டு. அங்கே சிவபெருமானுக்குக் 'குன்றமன்னதோர்' கோயில் கட்டினான். திருச்சிராப்பள்ளி அம்பாசமுத்திரம் திருச்செந்தூர் முதலிய இடங்களிற் காணப்படும் இவனுடைய கல்வெட்டுக்கள் இவன் அவ்

விடங்களில் சிவபெருமான் திருக்கோயில்கட்கு நிலங்களும் பிற நிவந்தங்களும் விட்டிருப்பதை எடுத்தோதுகின்றன.

ஏனாதி சாத்தஞ் சாத்தனார் என்பவர் இப்பாண்டியற்குத் தானைத் தலைவருள் ஒருவர். அவர் சிறந்த புலமையும் உடையவர். இந்நாளைத் தமிழ்நாட்டு அரசியற் சுற்றத்தாரை நோக்குவோர்க்கு இது புதுமையாகத் தோன்றும். இன்றைய தமிழ்நாட்டரசியல் தமிழைக் கொள்ளாது வேற்று மொழிகளை அரசியல் மொழியாகக் கொண்டுளது. இதனால் தமிழ் தெரியாதவர்கள் தமிழ் மக்களது கல்விநெறி யமைச்சராக வர இயலுகிறது; தமது பெயரைத் தமிழில் பிழையற எழுதும் பயிற்சியில்லாதவர்களும் அரசியற் பெருந்தலைவராய் விளங்க இடந்தருகிறது; தமிழ்ப் பயிற்சி மிகவுடையவர்களைத் தாழ்ந்த வாய்ப்புடையவராகவும் இந்நிலை உண்டுபண்ணியிருக்கிறது. முன்னாளைத் தமிழ்நாட்டரசியல் தமிழிலேயே நடந்தமையின் மிக்க தமிழ்ப்பயிற்சியுடையோர் அமைச்சராகவும் அரசர்களாகவும் இருந்து தமிழ்நாட்டைச் சிறப்பித்தனர். திருவாதவூரர் பாண்டி வேந்தர்க்கு அமைச்சராயிருந்தவர்; சேக்கிழார் சோழவேந்தர்க்கு அமைச்சுக் கடம்பூண்டிருந்தவர். வேந்தர்கள் புலமை மிகவுடையராயிருந்த செய்தியைச் சங்க இலக்கியங்களும் பிற்கால நைடதம் முதலிய நூல்களும் தெரிவிக்கின்றன. ஆகவே நெடுஞ்சடையன் ஆட்சியில் தானைத் தலைவருள் ஒருவராயிருந்த ஏனாதி சாத்தஞ் சாத்தனார், நல்ல தமிழ்ப்புலமையும் பாவன்மையும் பெற்றிருந்தாரென்பது வியப்புக்குரியதொன்றன்று.

ஏனாதி சாத்தஞ் சாத்தனார் பாண்டியன் நெடுஞ்சடையன் ஆட்சி நலத்தைக் கூறவேண்டிய விடத்து,

" அறைகடல் வளாகம் பொதுமொழி யகற்றிச்
சிலையும் புலியும் கயலும் சென்று
நிலையமை நெடுவரை யிடவயிற் கிடாய்
மண்ணினி தாண்ட தண்ணளிச் செங்கோல்
தென்னவன்......
கொன்றவென்றி நெடுஞ்சுடர்வேல்
கொங்கர் கோமான் கோச்சடையன்"

என்றும், இவனுடைய தனிப் பண்புகளை,

" சிரீவரன் சிரீமனோகரன் சினச் சோழியன் புனப் பூழியன்,
வீதகன்மஷன் விநயவிச்ருதன் விக்கிரமபாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்யசாசனன் மனூபமன் மர்த்தித வீரன்
கிரிஸ்திரன் கீதிகிந்நரன் கிருபாலயன் கிருதாபதானன்
கலிப்பகை கண்டக நிஷ்டூரன் கார்ய தக்ஷிணன்
பராந்தகன் பண்டிதவத்சலன் பரிபூரணன் பாபபீரு
குரையுறு கடற்படைத்தானைக் குணக்கிராகியன் கூடநிர்ணயன்"

என்றும் வரைந்திருக்கின்றார்.

இப்பாண்டியன் ஆட்சியில் பாண்டிநாடு இப்போது மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி யென்ற ஜில்லாக்களாகவும் அவையே பின்பு தாலூகாக்களாகவும் பிரிந்திருப்பதுபோல, அரசியல் ஆட்சி இனிது நடத்தற்கேற்ப, இரணிய முட்டநாடு புறப்பறளைநாடு என்பன முதல் தடக்குளநாடு கோட்டூர்நாடு என்பன ஈறாகப் பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் பாகனூர்க் கூற்றம் என்பது ஒன்று. இப்போது அது சோழவந்தான் பகுதியாக இருக்கிறது. அது மிக்க நீர்வளமும் நிலவளமும் சிறந்தது; வையையாறு பாயும் வளம் படைத்தது. இன்றைக்கும் அப்பகுதி பசுங் கம்பளம் விரித்ததுபோலப் பச்சென்று பயிர் செறிந்து இனிய காட்சி வழங்குகிறது. அப்பகுதியில் வேள்விக்குடி யென்பது ஓர் ஊர். அங்கே வேதியர் குடிகள் நிரம்ப இருக்கும் என்பதை நேரிற் சென்று காணாமலே அறிந்துகொள்ளுமாறு அவ்வூர்ப்பெயரே காட்டிவிடுகிறது.

அவ்வூரில் காமக்காணி நற்சிங்கன் என்றொரு வேதியன் வாழ்ந்தான். காமக்காணி என்பது அவன் குடியிற் பிறந்தார்க்கு வழிவழியாகவரும் சிறப்புப் பெயராகும். இதன்மேல் கொற்கை கிழான் என்றொரு பட்டமும் இவன் குடிப்பிறந்தாருக்கு உண்டு. ஒருநாள் நற்சிங்கன் தன்குடிக்கு வழங்கி வரும் கொற்கை கிழான் காமக்காணி என்ற சிறப்புக்கள் உண்டானதற்குக் காரணம் அறியவேண்டுமென விரும்பித் தன் மனையிலுள்ள பழஞ் சுவடிகளை ஆராய்ந்தான். கொற்கை கிழான் என்பதும் காமக்காணி என்பதும் பண்டை நாளில் அரசர்கள் தந்த சிறப்பு என்றும், வேந்தர்க்கு வேள்விமுடித்துத் தந்தது பற்றிக் காமக்காணி யென்ற சிறப்பும் தொடக்கத்தில் தன்முன்னோர் கொற்கைப் பகுதியில் வாழ்ந்திருந்து பின்பு இப்பகுதியிற் குடியேறினர் என்றும், நாட்டு மக்களின் நலங்குறித்துச் செய்த நற்பணி கண்டு வியந்த பண்டை வேந்தர் தன் முன்னோர்க்குக் கொற்கை கிழான் என்ற சிறப்பை நல்கினரென்றும் அறிந்தான். இவ்வாறு ஒவ்வொன்றாய்ப் பார்த்து வருகையில் வேள்விக்குடி யென்ற வூர் தனக்கு உரியதென்றும், இடைக்காலத்தே களப்பிரர்களால் அவ்வுரிமை இழக்கப்பட்டதென்றும் கண்டான். 'பண்டொரு புடையில் வைத்த பழம்பொருள் கிடைத்தவர்போல்' பெருமகிழ்வு கொண்டான். அவ்வூரில் வாழ்ந்த முதியவரைக் கண்டு அவர்களோடு அளவளாவி உண்மையை உறுதிசெய்து கொண்டான்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? உதவாதே; இதற்கு என் செய்வது என்று பலபட எண்ணினான். வேறு சில வேதியர்களைக் கலந்து செய்யவேண்டிய செயல்வகைகளை

யாராய்ந்தான். இறுதியாக, வேந்தன்பால் இச் செய்தியை முறையிடுவதெனத் துணிந்தான்.

பின்பொரு நாள், நற்சிங்கன் கூடல்நகர்க்குச் சென்று வேந்தன் கோயில் வாயிலில் நின்று முறையிட்டான். காவலர் சென்று வேந்தனுக்குத் தெரிவித்து நற்சிங்கனையும் மன்னன் திருமுன் கொண்டுசென்று நிறுத்தினர். நெடுஞ்சடையன் நற்சிங்கனை நோக்கி 'என்னே நின்குறை?' எனப் பணித்தான்.

"வேந்தே, நின் முன்னோருள் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யென்றொரு பாண்டி வேந்தனார் ஆட்சி செய்தார். அவர்வெற்றி மிகுதியும் வேள்வி மிகுதியும் உடையர்; அவர் தன்னை எதிர்த்த மறவரை வென்று கழுதையேர் பூட்டிப் பாழ் செய்த பகைவர் எயில்கள் பல; விளை புலங்களில் தேரைச் செலுத்தி யழித்த பகைவர் நாடுகளும் பல; பகைப் புலத்தில் களிறுகளைப் பரப்பிப் பாழ்செய்த நீருண் கயங்கள் பல; வெற்றிவேட்கையால் விழுங்கப்பட்டுப் போர் குறித்து வந்து அவர்க்குத் தோற்றுப் பழிபூண்ட பகை வேந்தரும் பலர்.

'நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பல.'

அதனால் நெட்டிமையார் முதலிய சான்றோர் களவேள்வியும் நான்மறை வேள்வியும் பெருக நடத்துவது கண்டு 'யாபல கொல்லோ பெரும' என்று அவரைப் பாராட்டியுள்ளனர். வெல்போர் வேந்தர்களில் செருக்கள வேள்வி செய்வோர் பலராயினும், முதுகுடுமிப் பெருவழுதிபோல் மறைவேள்வி பல செய்தோர் இலராதலால் அவரைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யெனச் சான்றோர் சிறப்பித்து வழங்கினர். அவ் வேந்தர் பெருமானார் பாகனூர்க் கூற்றத்தில் வேள்விக்குடி யென்னும் ஊர் இருக்குமிடத்தே பெரிய வேள்வி யொன்றைச் செய்தார். அக்காலை எம் முன்னோருள் கொற்கை கிழான் நற்கொற்றன் என்பார் அவ் வேள்வியை முடித்துத் தந்தார். அதனால் பெருமகிழ்வு கொண்ட வேந்தர் பெருமான் வேள்வி நிகழ்ந்த விடத்தை வேள்விக்குடி யென்று பெயரிட்டு வழங்கியருளினார். அன்றுமுதல் அவ்வூர் எங்கள் முன்னோர்க் குரியதாகவே இருந்து வந்தது," என்றான்.

இதனை,

"கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்துப்
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யென்னும் பாண்டியாதி ராஜன்
நாகமாமலர்ச் சோலை நளிர்சினை மிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச்

சொற்கணுளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கை கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்
கேள்வி யந்தணுளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று வேள்விக்குடியென்ற பதியைச்
சீரொடு திருவளரச் செய்தார், வேந்தன் அப்பொழுதே
நீரோடட்டிக் கொடுத்தான்,''

என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இவ்வாறு நற்சிங்கன் கூறக் கேட்ட நெடுஞ்சடையன் அவனை நோக்கி, 'பின்பு அது என்னுயிற்று?' என்று வினவினுன்.

"வேந்தே, நற் கொற்றனுர் பெற்ற வேள்விக்குடி அவர்க்குரியதாகவே நெடுங்காலம் இருந்து வந்தது. பின்னர் இந்த நாட்டில் களப்பிரர் என்னும் கொடுங்கோன் மன்னர் புகுந்து பாண்டிநாட்டை அலைத்தனர்; பாண்டி மன்னர்களையும் நாட்டினின்றும் ஓடுமாறு துரத்தினர்; நாட்டைத் தாம் கைக்கொண்டு நாட்டு மக்கட்குப் பேரின்னலை விளைத்தனர். பேரூர்களையும் சிற்றூர்களையும் தீக்கிரையாக்கினர். மற மிக்க மக்கள் பலர் மாண்டனர்; மறக்குடி மகளிர் தீப்புகுந்தனர். கடவுள் நிலையங்களும் கல்வி நிலையங்களும் சீரழிந்தன. வெளிநாட்டார் புகழும் வீறுபெற்றிருந்த தமிழ்மக்கள் ஒளியிழந்து குன்றினர். பண்டை வேந்தர்கள் பாணர் கூத்தர் புலவர் அந்தணர் என்ற இவர்கட்கு நல்கியிருந்த ஊர்களை அரசியலிற் சேர்த்துக் கொண்டு, அவ்வேந்தர் பெற்றிருந்த புகழ் விளக்கத்தை மங்குவித்தனர். தத்தம் மனைகளிலிருந்து மானமுடன் வாழ்க்கை நடத்திய மக்கள் மானமிழந்து மனைதோறும் இரந்துண்டு வாழும் வறுமைநிலை எய்தப் பண்ணினர். அதனுல் என் முன்னேனுன நற்கொற்றன் பெற்ற வேள்விக்குடி அரசியலில் சேர்ந்துவிட்டது,'' என்று நற்சிங்கன் எடுத்துரைத்தான். சடில பராந்தகன் உள்ளத்தில் களப்பிரர்பால் பெருவெறுப்பும் ஏனை அந்தணர் முதலியோர்பால் கழிபேரிரக்கமும் பெருகின. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து தான் காக்கும் பாண்டிநாட்டிற்குப் பகைவர் செய்த தீங்கினைக் கேட்க உள்ளம் பதறிற்ற. உடனே 'மறையோய் இனிக் கூறுவதைச் சுருங்கச் சொல்லுக,' என்றுன். நற்சிங்கன், அஞ்சி,

"ஒல்காத வேற்றானையோடு ஓதவேலியுடன் காத்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யெனும் பரமேசுரனுல்
வேள்விக்குடி யெனப்பட்டது கேள்வியிற் றரப்பட்டதனைத்
துளக்கமில்லாக் கடற்றனையாய், களப்பிரரால் இழக்கப்பட்டது,''

என்று விண்ணப்பஞ் செய்தான்

கேட்ட நெடுஞ் சடையன் முறுவலித்து, 'நன்று நன்று' எனத் தலையசைத்து 'நீ சென்று பாகனூர்க் கூற்றத்து நாட்டவர் கூடிய மாநாட்டில் நினக்குரிய கிழமையைக் காட்டுக,' என்று கட்டளையிட்டுப் பாகனூர்க் கூற்றத்து நாட்டவரை மாநாடு கூடுமாறு பணித்தான். நற்சிங்கனும் நாடு கூடுமாறு விண்ணப்பஞ் செய்து கொண்டான்.

பாண்டி நாட்டுப் பாகனூர்க் கூற்றத்து நாட்டவர் சின்னாட்குப் பின் கூடினர். கூடின மாநாட்டுப் பேரவையில் காமக்காணி நற்சிங்கன் பழம் பொத்தகங்களையும் சான்று கூறும் முதுவர்களையும் கொணர்ந்து காட்டினன். நாட்டவர் ஆராய்ந்து நற்சிங்கன் கூறியது உண்மையெனத் தேர்ந்து வேந்தனுக்குத் தெரிவித்தனர். வேந்தன் ஏனாதிச் சாத்தஞ் சாத்தனார் முதலிய தானைத் தலைவர்களைக் கூட்டி ஆராய்ந்து முடிபு செய்து, 'மேனாள் எம் குரவரால் தரப்பட்டதனை எம்மாலும் தரப்பட்டது,' என்று செம்மாந்து எடுத்துரைத்துக் கொற்கை கிழான் காமக்காணி நற்சிங்கற்கு நீரோட்டிக் கொடுத்தான்.

இச் செயல் பின்னர்ச் செப்பேட்டில் வரையப்பட்டது. அக்காலைப் பாண்டியருடைய மெய்க்கீர்த்தியை வடமொழியில் சருவகிருது யாஜியாகிய வரோதய பட்டரும் எஞ்சிய பகுதிகளைத் தமிழில் ஏனாதி சாத்தஞ் சாத்தனாரும் எழுதித்தந்தனர். இஃது இப்போது வேள்விக்குடிச் செப்பேடு என வழங்குகிறது.

வேள்விக்குடிச் செப்பேடு பெற்று அதன் வழியாகத் தன் முன்னோர் பெற்ற செல்வத்தை மீட்பித்த சுவரன்சிங்கன் தான் பெற்றதனைத் தானே மேற்கொள்ளாது தன் உடன் பிறந்தார்க்கும் பிறர்க்கும் பகுத்தளித்தான். பெற்றதனை முதலில் அவன் மூன்று கூறு செய்து ஒரு கூற்றைத் தனக்கு வைத்துக் கொண்டு ஏனை இரு கூறுகளை ஐம்பது வேதியர்க்கு நீரோட்டிக் கொடுத்தான். தனக்காக வைத்த ஒரு கூற்றிலும் தம்பிமார்க்கு நான்கும் தன் சிற்றப்பனார் மக்களுக்கு ஆறுமாகப் பங்கு செய்துதந்தான். இறுதியிலும் மூன்று கூற்றாரும் ஒன்று கூடி இச் செப்பேட்டு வக்கணையைச் செவ்வையாய்ப் பாடித் தந்த ஏனாதி சாத்தஞ் சாத்தனார்க்கு நான்கு படாகாரம் (நில வளவு வகை) நிலம் கொடுத்துச் சிறப்பித்தனர். இச்செய்தி முற்றும் வேள்விக்குடிச் செப்பேட்டில் நன்கு தெளியக் காணப்படுகின்றன. (Epigraphica Indica. Vol. XVII. No. 16. pp. 291—309.)

கவிமணி கண்ட பண்டிதமணி

உண்மைப் புலவரின் உயர்வு

முதுபெரும் புலவர் பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர் களைக் கவிமணி திரு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் உளமுவந்து பாராட்டிய ஒண்மையுரை. அஃது, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யு ளாய்த் திகழ்கின்றது. பாக்கள் வெண்பா ஒன்பதும், விருத்தப்பா ஆறு மாக விளங்குகின்றன. அவற்றுள் சில காண்க.

"எனக்கு வயது எழுபத்தாறு (76) ஆகிறது. பூரண ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறியுள்ளார். நீத்தல் விண்ணப்ப உரை யைப் படிக்கச்சொல்லிக் கேட்டேன். பல தடவையாகக் கேட்க நேர்ந்தது. அவ்வப்போது சிலசில பாடல்கள் தோன்றின. அவற்றை அப்படியே எழுதியனுப்பி யிருக்கின்றேன். தாங்கள் இப்பணியில் ஈடுபட்டிருப்பது தமிழ்நாட்டின் பாக்கியமேயாகும். இம்மாதிரியான விளக்கவுரை எழுதுவ தற்குத் தங்களைத் தவிர வேறொருவர் இக்காலத்தில் இல்லையென்பது என் உண்மையான அபிப்பிராயம்."

ஒண்மைப் பாக்கள்

க. பண்டிதர் போற்றுமகா பண்டிதா ! நின்னையெதிர்
கண்டதுபோ லுள்ளம் களிப்படைந்தேன்—தண்டமிழ்
வித்தகர்க்கு வாய்த்த விருந்தாம் மணிவிளக்கப்
புத்தகமென் கைவந்த போது.

உ. வாசக மெல்லாம் மணிவா சகமாமோ ?
காசெல்லாம் காணும்பொற் காசாமோ ?—பேசுலகில்
மன்னுமுரை யெல்லாம் மகிபால மாநகரான்
சொன்னவுரைக் கீடாமோ ? சொல்.

ந. வண்டமிழ் நாட்டுக்கு வாய்த்த மணிவிளக்கம்
கண்ட கதிரேசன் கண்டதுபோல்—மண்டுபுகழ்
வாதவூர் அண்ணல் மனங்கண்ட மாதவரிப்
பூதலத் துண்டோ புகல்

ச. வித்தகர்க் கமுதாம் நீத்தல் விண்ணப்ப உரையின் பாலுள்
பத்தியின் ஆழம் கண்டேன் பசுந்தமிழ் இனிமை கண்டேன்
புத்தியின் நுட்பங் கண்டேன் புலமையின் வளமுங் கண்டேன்
உத்தம வுரைநீ தந்த உரையெனற் கைய முண்டோ.

குறிப்பு : அழுக்காறின்மை அவாவின்மை முதலிய விழுப்பே ரொழுக்கம் பூண்டு உள்ளது உள்ளவாறுரைக்கும் பொய்யாநாவின் மேலோராம் தொன்மைச் சங்க மருவிய சான்றோர் போலவும், அணிமணி மதிக் கும் துணிநாவுடைத் தூயோர்போலவும், 'கவிமணி' யவர்கள் உரைத்த கட்டுரை எல்லாராலும் மகிழ்ந்து பாராட்டி மீனங்கொளற்பாலவாம் முழுமணி என்க.—ஆசிரியர்.

படர்க்கை 'இ' விகுதி

[பண்டித புலவ, வித்துவான், ஞா. தேவநேயன், எம். ஏ.]

தமிழிலுள்ள பெண்பால் விகுதிகளுள் ஒன்றான 'இ' என்பது 'ஸ்திரி' என்னும் வடசொற் சிதைவென்று, 1951 மார்ச்சில் வெளிவந்த மதுரைக் கல்லூரி ஆண்டு மலரில், அக்கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் ரா. கிருஷ்ணமூர்த்தி (B. A, B. O. L., L. T.) அவர்கள் வரைந்துள்ளார்கள் என ஒரு தமிழன்பர் எழுதியுள்ளார். அது "புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" யாயினும், அதனால் பலர் மயக்குண்டிருப்பதாகத் தெரிகின்றதனால், அதற்கு உடனே மறுப்பெழுதாவிடின்,

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே"

என்பதற்கிணங்க, அது ஒருகால் எதிர்கால இலக்கண நூலிலும் இடம் பெறலாமென்று கண்டு, இம்மறுப்பை எழுதலானேன்.

மதுரைக் கல்லூரி யிதழில் இகர விகுதியைப் பற்றி வரையப்பட்டுள்ள பகுதி வருமாறு :

"தமிழில் பெண்பால் விகுதி"

"'இ' என்பது தமிழில் பெண்பால் விகுதி என்று கூறப்படுகிறது. உண்மையில் பெண்பால் விகுதி 'இ' அல்ல. அது பெண்பால் விகுதியாயின் 'வில்லி' 'நாற்காலி' முதலியவற்றில் அப்பொருளில் வராதிருப்பதேன்? உண்மை என்னவென்றால், 'இ' என்பது 'ஸ்திரி' என்பதன் சிதைவு. பெரும்பாலும், 'த்தி,' 'ச்சி,' 'ட்டி' என்பவையே பெண்பால் விகுதிகளாக வருகின்றன. இவை 'ஸ்திரி' என்பதன் மாறுபட்ட உருவங்கள் என்பது தெளிவு. முதலில் 'ஸ்திரி' என்பதே பெண்பால் விகுதியாக இருந்து பிறகு அது சிதைந்து 'த்தி' 'ச்சி' 'ட்டி' என்று மாறியிருக்கவேண்டும்.

உ-ம்:

குற + ஸ்திரி = குறத்தி. புலை + ஸ்திரி = புலைச்சி. வெள்ளான் + ஸ்திரி = வெள்ளாட்டி. வலை + ஸ்திரி = வலைச்சி. வண்ணான் + ஸ்திரி = வண்ணாத்தி. ஆய் + ஸ்திரி = ஆய்ச்சி. பார்ப்பான் + ஸ்திரி = பார்ப்பாத்தி. பிராமண + ஸ்திரி = பிராமணத்தி. ராஜா + ஸ்திரி = ராஜாத்தி. பறை + ஸ்திரி = பறைச்சி. பெண்டு + ஆம் + ஸ்திரி = பெண்டாட்டி. கன் + ஆம் + ஸ்திரி =

கண்ணுட்டி, பொம்மனுட்டி. கம்மனுட்டி என்பவையும் இவ்வாறே வந்திருக்கவேண்டும்.''

இனி இதன் மறுப்பு விளக்கம் வருமாறு :—

தமிழில், ஆண்பால் பெண்பால் விகுதியேற்படாத முது காலத்தில், அதாவது உயர்திணை அஃறிணை என்னும் திணை வேறுபாடு தோன்றாத பழங்காலத்தில், ஒருமைப்பால் பன்மைப் பால் என்னும் இருபால்களே இரு திணைக்கும் பொதுவாக வழங்கி வந்தன. முதற்காலத்திலேயே பகுத்தறிவுள்ளதும் இல்லதும் எனப் பொருள்களைத் தமிழர் இரு பகுப்பாகப் பகுத்திருக்கமுடியாது. நாகரிகமும் அறிவு வளர்ச்சியுமாகிய பண்பாடடைந்த பின்னரே, அவர் அவ்வாறு செய்திருத்தல்வேண்டும். இன்றும், இருதிணைக்கும் பொதுவாகப் பல சொற்களும் விகுதிகளும் வழங்கக் காண்கின்றோம் அவை முந்துகால மொழி நிலையைக் காட்டும் எஞ்சு குறிகளாகும்.

எடுத்துக்காட்டு :

சொற்கள்

ஆண், பெண், தாய், தந்தை, பிள்ளை, குட்டி, தான், தாம்.

விகுதிகள்

கத்தரிப்பான்=கத்தரிக்கின்றவன் (உயர்திணை ஆண்பால்)
,, =கத்தரிக்கோல் (அஃறிணை ஒன்றன்பால்)
கண்ணி=கண்ணையுடையவள் (உயர்திணைப் பெண்பால்)
,, =கண்ணையுடையது (அஃறிணை ஒன்றன்பால்)
கொல்லி=கொல்கின்றவன் (உயர்திணை ஆண்பால்)
,, =கொல்கின்றவள் (உயர்திணைப் பெண்பால்)
,, =கொல்கின்றது (அஃறிணை ஒன்றன்பால்)

"இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே."

"இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்கள் (657, 659) இங்குக் கவனிக்கத் தக்கன.

பால் காட்டும் விகுதிகள், இன்று எங்ஙனம் பெரும்பாலும் சுட்டுப்பெயர்களும் அவற்றின் குறுக்கமுங் குறையுமாயிருக்கின்றனவோ, அங்ஙனமே முற்காலத்தும் இருந்தன.

எ-டு: அது - வலது, தனது, உளது, நல்லது.
இது - வெளிது, வலிது, கரிது, புதிது.
உது - விழுது, பழுது, எருது (எருது), மருது.
அவன் - ஆன் - அன்: நல்லவன் - நல்லான் - நல்லன்.
அவர் - ஆர் - அர்: வல்லவர் - வல்லார் - வல்லர்.
இவர் - ஈர் - இர: (மகளிவர்) - (மகளீர்) - மகளிர்.

இகர வுகரவடி விகுதிகள் இக்காலத்துப் பெரும்பாலும் வழக்கிறந்தன.

தமிழின் அசைநிலைக்காலத்தில் (Monosyllabic or Isolating Stage), சுட்டுச்சொற்கள் விகுதி பெறாமல் சுட்டடியாகவே வழங்கி வந்தன. இன்று வழங்கும் பலவின்பால் அகர விகுதி முந்துநிலையை யுணர்த்தும் அடையாளமாம்.

எ-டு: நல்ல = நல்லவை (பெயர்)
வந்த = வந்தன (வினைமுற்று)

"ஒப்ப நாடி அத்தக வொறுத்தி"

என்னும் புறநானூற்று (10) அடியில், 'அத்தக' என்பது 'அதற்குத்தக' என்று பொருள்படுதலால், அசைநிலைக்காலத் துவக்கத்தில், சுட்டசைச்சொற்கள் எண்ணுணர்த்தாது சுட்டுப் பொருளொன்றே உணர்த்தி வந்தன என ஊகிக்க இடமுண்டு.

சேய்மை அண்மை முன்மை ஆகிய மூவகையிடங்களையும் முறையே சுட்டும் அ, இ, உ (அல்லது ஆ, ஈ, ஊ) என்பன, அசைநிலைக்காலத்தில் தனிச்சொல்லேயாகவும், அதற்கடுத்த புணர்நிலைக்காலத்தில் (Compounding Stage) தனிச்சொல்லும் கூட்டுச் சொல்லுமாகவும், அதற்கடுத்த விகுதிநிலைக்காலத்தில் (Inflexional Stage) தனிச்சொல்லும் கூட்டுச்சொல்லும் விகுதியுமாகவும், வழங்கி வந்து, இன்று நாலாங்காலமாகிய கொளுவுநிலைக்காலத்தின் (Agglutinative Stage) பிற்பகுதியில், தனிச்சொல்லாய் வழங்குவதொழிந்து ஏனையிருவகையாகவே வழங்கி வருகின்றன.

எச்சொல்லும் வேறொரு சொல்லின் விகுதியாக அமைந்தவுடன், தன் தனிப்புப் பொருளை இழந்துவிடும். ஆகவே, சுட்டுச்சொற்களும் விகுதியாயமைந்தபின் தம் சுட்டுப்பொருளையிழந்து பால்மட்டும் உணர்த்தி நிற்கும்.

ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு விகுதிகள் வகுக்கப்பட்ட காலத்தில், இகரச்சுட்டு ஒருமை விகுதிகளுள் ஒன்றாகக் கொள்ளப்பெற்றது. அன்று ஆண் பெண்பால் வேறுபாடு குறிக்கப்பெறாத காலமாதலால, ஆண்பால் பெண்பால் ஒன்றன் பால் ஆகிய மூப்பாலுக்கும் பொதுவாகவே இகரச்சுட்டு

வழங்கத் தலைப்பட்டு, அன்றிருந்து அம்முறையே தொடர்ந்து வருகின்றது; (பெண்மகள் என்னும் மாறேக்கத்து வழக்கும் பெட்டைப்பையன் என்னும் வடார்க்காட்டு வழக்கும், ஆண்பால் பெண்பால் விகுதியேற்படாத முந்துகால மொழிநிலையை ஊகித்துணர வுதவும்.)

எ - டு : விறகுவெட்டி (ஆண்பால்)
மண்வெட்டி (ஒன்றன்பால்)
கயற்கண்ணி (பெண்பால்)
காடைக்கண்ணி (ஒன்றன்பால்)

ஆகவே, இகர விகுதி ஒருமை விகுதியேயன்றிப பெண்பால் விகுதியன்று. அது ஒரு குறித்த சொல்லில் மேற்கூறிய முப்பாலுள் ஒன்றை உணர்த்துமே யன்றித் தனித்த நிலையில் உணர்த்தாது. கண்ணன் என்னும் ஆண்பாற் சொற்கு நேரான பெண்பாற் சொல், கண்ணள் என்பதே யன்றிக் கண்ணி என்பதன்று. கண்ணன் என்பது கண்ணன் என்று குறுகு வதுபோலக் கண்ணுள் என்பதும் கண்ணள் என்று குறுகும். வந்தான் என்பதற்கு வந்தாள் என்பது எங்ஙனம் பெண்பாலோ, அங்ஙனமே கண்ணன் என்பதற்கும் கண்ணள் என்பதே நேரான பெண்பாலாம். கண்ணுள் அல்லது கண்ணள் என்று சொல்வதற்குப் பதிலாகக் கண்ணி என்று சொல்வது வழக்கூன்றிவிட்டதனால், இகர விகுதியைப் பெண்பாற் சிறப்பு விகுதியென்று பலர் மயங்க நேர்ந்துவிட்டது. அவ்விகுதி பெண்பால் விகுதியாயிருக்கக் கூடியதே யன்றிப் பெண்பாலுக்கே யுரிய விகுதியன்று.

'இ'வ் விகுதி 'அள்' விகுதியைவிடப் பலுக்ுவதற்கு (உச்சரிப்பதற்கு) எளிதாயும் இன்னோசையுள்ளதாயுமிருத்தலே, அது பெருவழக்காய் வழங்குவதற்குக் காரணமாகும். கண்ணள் கண்ணி என்னும் இரு சொற்களையும் பலுக்கிக் காண்க. இக்காரணம் பற்றியே, தாயைக் குறிக்கும் சொற்களுட் சில 'அள்' விகுதியைவிட்டு 'இ'வ் விகுதியை ஏற்றுள்ளன.

எ - டு : ஆண்பால் (தந்தை) பெண்பால் (தாய்)
அத்தன் அத்தி
அச்சன் அச்சி

அத்தி என்பதொடு தொடர்புள்ள அத்தை என்னும் பெயர், அத்தனின் (தந்தையின்) உடன்பிறந்தாளைக் குறிக்கும். அத்தன் என்பதன் திரிபே அச்சன் என்பது. அச்சன் என்னும் ஆண்பாற்பெயர் சேரநாடான மலையாள நாட்டிலும், அச்சி என்னும் பெண்பாற்பெயர் பாண்டி நாட்டிலும், வழங்கி வருகின்றன

அச்சி = அக்கை (பாண்டிநாட்டு வழக்கு)

அக்கை தாய்போன்றவளாதலால் அச்சி எனப்பட்டாள்.

ஒப்பு நோக்க : தம் + அவ்வை (தாய்) = தவ்வை = தமக்கை

அச்சு (அச்சன்) அச்சி என்னும் பெயர்கள், தொடர் மொழியுறுப்பாக, முறையே தாய்தந்தைப் பொருளில் வழங்கி வருகின்றன.

அப்பச்சு = அப்பனின் தந்தை = பாட்டன் (பாண்டிநாட்டு வழக்கு)
அம்மாச்சி = அம்மையின் தாய் = பாட்டி (சோழநாட்டு வழக்கு)

அப்பச்சு என்பது அப்பச்சி எனத் திரிந்து வழங்குகின்றது.

அருமையும் பெருமையும் பற்றி, பருவமடைந்துள்ள ஆடவரையும் பெண்டிரையும் தாய்தந்தையரைக் குறிக்கும் முறைப்பெயரால் அழைக்கும் வழக்கம், நம்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருவதால், அப்பெயர்கள் ஆண்பாற் பெண்பாற் பெயரீற்றுத் தன்மையடைந்துள்ளன. ஓர் ஆடவரை ஐயா என்றும், ஒரு பெண்டை அம்மா என்றும் அழைத்தல் காண்க. அம்மை அல்லது அம்மா என்னும் பெயர், இயற்பெயரும் தொழில்பற்றிய பொதுப் பெயருமான பெண்பாற் பெயர்களின் ஈறாகப் பெருவழக்காய் வழங்கி வருகின்றது.

எ - டு : பொன்னம்மை, பொன்னம்மா } இயற்பெயர்.
தாயம்மை, தாயம்மா
வாத்தியாரம்மா, டாக்டர் அம்மா - தொழில் பற்றிய பெண் பாற் பொதுப் பெயர்

இங்ஙனமே, அத்தி அச்சி என்னும் தாய்முறைப் பெயர்களும், குலமும் தொழிலும் குணமும் நிறமும் நிலைமையும் பிறவும் பற்றிய பெண்பாற் பொதுப்பெயர்களின் ஈறாக வழங்கி வருகின்றன.

எ - டு :
குற + அத்தி = குறத்தி
தட்டா(ன்) + அத்தி = தட்டாத்தி
பறை + அச்சி = பறைச்சி
வலை + அச்சி = வலைச்சி } குலம்.

உபாத்தி + அச்சி = உபாத்திச்சி
மருத்துவ + அச்சி = மருத்துவச்சி } தொழில்.

மடை + அச்சி = மடைச்சி - தன்மை
வெள்ளை + அச்சி = வெள்ளைச்சி - நிறம்

மூண்டை + அச்சி = மூண்டைச்சி
ஆண்டி + அச்சி = ஆண்டிச்சி
பேய் + அச்சி = பேய்ச்சி } நிலைமை

நெட்டை + அச்சி = நெட்டைச்சி
குள்ள + அச்சி = குள்ளச்சி } அளவு.

குப்ப + அச்சி = குப்பச்சி - இடம்

சடை + அச்சி = சடைச்சி
சிற்றிடை + அச்சி = சிற்றிடைச்சி } உறுப்பு.

வெள்ளைச்சி, பேய்ச்சி, குப்பச்சி, சடைச்சி முதலிய பெண்பாற் பெயர்கள், நாட்டுப்புறங்களில் இயற்பெயராக இடப்பட்டு வருகின்றன.

அத்தி அச்சி என்னும் பெயர்சா் ஈறாக நின்று புணரும் போது, அவற்றின் அகர முதல் கெட்டுவிடுகின்றது. கெடாது நிற்பதும் உண்டு.

எ-டு: கள்ளவத்தி

வெள்ளைச்சி குப்பச்சி என்னும் பெயர்களை வெள்ளையம்மா குப்பம்மா என்பவற்றுடன் ஒப்பு நோக்குக.

அத்தி என்னும் சொல்லின் குறையான 'தி' ஈறு, நிலைமொழியீற்று ளகர மெய்யோடு புணரும்போது, அவ்விரண்டும் 'ட்டி' எனத் திரியும். அது என்னும் சொல்லின் குறையான 'து'வ் வீறும், இங்ஙனமே 'டு'வ் வீறாகத் திரிதல் காண்க. (தாள் + து = தாட்டு.)

ஆளன் (ஆள் + அன்) என்னும் ஆண்பாலீற்றிற்கு எதிராக ஆட்டி (ஆள் + தி) என்பது பெண்பாலீறாய் வரும்.

எ-டு: வெள்ளாளன்—வெள்ளாட்டி
கண்ணாளன்—கண்ணாட்டி
மணவாளன்—மணவாட்டி
திருவாளன்—திருவாட்டி
குணவாளன்—குணவாட்டி
குணாளன்—குணாட்டி

வெள்ளாளன் என்பதை வெள்ளான் என்பது தவறு.

மகன் என்னும் ஆண்பாலீறு மான் என்று மருவுவது போல், மகள் என்னும் பெண்பாலீறு மாள் என்று மருவும்.

எ-டு: பெருமகன் - பெருமான், குறுமகன்-குறுமான், மருமகன் - மருமான், திருமகன் - திருமான், வெளிமகன் - வெளிமான்.
பெருமகள் - பெருமாள், வேண்மகள் - வேண்மாள், திருமகள் - திருமாள்.

'மாள்' என்னும் பெண்பாலீற்றொடு மேற்காட்டிய 'தி' என்னும் ஈறும் சேரும்போது, அவ்விரண்டும் 'மாட்டி' எனத் திரியும்.

எ-டு:

ஆண்பால்	பெண்பால்
பெருமான்	பெருமாட்டி
திருமான்	திருமாட்டி

பெருமான் என்பது பிரான் என்று மருவும்போது, பெருமாட்டி என்பது பிராட்டி என மருவும். பெருமாள் திருமாள் என்னும் ஒற்றையீற்றுப் பெண்பாற் பெயர்கள் இன்று வழக்கிறந்தன. விகுதிமேல் விகுதி வந்து இரட்டைப்பன்மைப் பெயர்கள் வழங்குவது போன்றே, ஈற்றின்மேல் ஈறு வந்து இரட்டைப்பெண்மைப் பெயர்களும் வழங்கும்.

எ - டு. வெள்ளாட்டி + அச்சி = வெள்ளாட்டிச்சி

பெண்டாட்டி (பெண்டு + ஆட்டி) என்பதிலுள்ள 'ஆட்டி' ஈறு மனைவிப்பொருள் குறிக்க வந்ததாகும். 'பெண்' 'பெண்டு' என்பன இடம்நோக்கி மனைவிப் பொருளுணர்த்தும் பெண்பாற் பொதுப் பெயராம்.

கை + பெண் = கைம்பெண்
,, + பெண்டு = கைம்பெண்டு
,, + பெண்டாட்டி = கைம்பெண்டாட்டி

பெண்பெண்டாட்டி என்பது, ஆண்பிள்ளைப் பிள்ளைகாரன்பசு அரைஞாண்கயிறு என்பன போன்ற மிகைபடு சொற்றொடர்.

"ஒரு பெண்பெண்டாட்டி ஆணுடையுடுத்து." (ஈடு. 6, 2)

கைம்பெண்டாட்டி பெண்பெண்டாட்டி என்பன, முறையே, கம்மனாட்டி பொம்மனாட்டி எனக் கொச்சை வழக்கில் மருவி வழங்குகின்றன.

அத்தி அச்சி என்னும் ஈறுகள் பெண்பால்மட்டும் உணர்த்தி உயர்வு குறிக்காமையால், தட்டாத்தியம்மா, உபாத்திச்சியம்மா முதலிய பெயர்கள் உயர்வு குறிக்க வந்த இரட்டைப் பெண்பாற் பெயராகும்.

அப்பன், ஐயன் என்னும் தந்தைமுறைப் பெயர்கள், அருளப்பன், சண்ணப்பன், செல்லப்பன், நாகப்பன், அருளையன், கண்ணையன், செல்லையன், நாகையன் என எவ்வாறு ஆண்பாற் பெயரீறுகளாய் ஆளப்பெறுகின்றனவோ; அவ்வாறே, அம்மை, அத்தி, அச்சி என்னும் தாய்முறைப் பெயர்களும் பெண்பாற் பெயரீறுகளாய் ஆளப்பெறும் என்க.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழில் பெண்பால் குறித்து வரும் 'த்தி' 'ச்சி' 'டி' ('ட்டி') என்னும் ஈறுகளெல்லாம், அத்தி அச்சி என்னும் தென்சொற்களின் குறையும் திரிபுமேயன்றி, 'ஸ்திரி' என்னும் வடசொற் சிதைவல்ல என்று தெற்றெனக் கண்டு கொள்க.

கலையின் வைப்பே!

[புதுவை, முதுகண்ணன்]

கன்னலினுங் கனிந்த சுவைச் செந்தமிழே!
காணுமின்பம் விளைக்கும் அன்பே!
உன்ன உன்ன நெஞ்சத்தில் ஊற்றெடுக்கும்
உயர்தமிழே! தமிழர் பேறே!
மின்னொளியைப் பாய்ச்சுகின்ற வியன்றமிழே!
விளக்கமுற்ற புலவர் வாழ்வே!
வன்மையெலாம் தந்துநனி வாழ்விக்கும்
வண்டமிழே! வாழ்க! வாழ்க!

என்னுயிரிற் கலந்தியங்கி ஏற்றஞ்செய்
எழிற்றமிழே! கலையின் வைப்பே!
மன்னுநிலை பெற்றொளிரும் வையத்துள்
வளர்ந்துள்ள மொழிகட் கெல்லாம்
முன்னுதித்த மொய்ம்பமரும் மூதப்பொருளே!
முழங்கிடுஞ்சீர் வழங்குளத்தில்
நின்றுபுகழ் நிலவிடவே நீள்கதைசொல்
நேரிசையாம் தமிழே வாழ்க!

அலைகின்ற கருங்கடற்கும் அனலுக்கும்
அழியாது கன்னித் தன்மை
குலையாமல் குலவுகின்ற குளிர்தமிழே!
குறிக்குமியல் நெறியில் மன்னி
மலைமலையாய் நெஞ்சத்திற் கருத்தூட்டி
வளஞ்சான்று கிளைக்கும் வாழ்வில்
நிலைசெய்யும் நீர்மையினில் தோலாது
நெடிதுவளர் தமிழே வாழ்க!

இயற்கையினிற் கலந்தினிமை கவிந்துண்மை
இலங்கிடச்செய் உணர்வில் தோய்ந்து
மயங்கிடுஞ்சீர் கவிதைவளர் கவிஞன்றன்
வாழ்வியலைக் காட்டும் நுண்மைப்
பயன்விளைக்கும் பண்பமரும் பைந்தமிழே!
பாட்டளிசெய் பாங்கி னுள்ள
நயன்விளைக்கும் நாடகத்துள் இன்பளிக்கும்
நல்லிசையாம் தமிழே வாழ்க!

சிவமுருகன் தமிழ்

தமிழ் நெடுங்கணக்கு-பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்,
டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை,
L.C P.S., L.M.S S.A. (Lond).]

(செந்தமிழ்ச் செல்வி—சிலம்பு உசு பரல்-க, பக்கம் சகச தொடர்ச்சி)

முப்பத்துமூன்று தனிச் சிறப்புவாய்ந்த எண்

விஞ்ஞானச் சான்றுகள்—உருத்திராக்கமும் முப்பத்துமூன்றும்

உருத்திராக்கம்

பழங்காலத்தில், நம்முன்னோர் உருத்திராக்கம் என்னும் அக்கமணியை தெய்வச்சின்னமாக அணிந்து வந்தனர்; இதை நம்நாட்டுச் சித்தர்கள் அனைவரும் தாம் வணங்கும் கடவுளே போன்றதென்றும், தமது தவவேடத்தின் அடையாளமாகவும் கருதிவந்தனர். இவ்வுலகிற் பல சமயத்தவரும், உருத்திராக்க மணிகளையாவது, அவை போன்ற துளசிமாலை அல்லது செப மணிகளையாவது, அணிந்தும் பூசித்து வணங்கியும் போற்றி வருவது யாவரும் அறிந்ததே. "மாலறநேயமலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" (சிவஞானபோதம்—12-ம் சூத்திரம்) என்றபடி, உருத்திராக்கமும் விபூதியும் மெய்ஞ்ஞானிகளுடைய திருவேடமாகும்; இத்தகைய விழுப்பொருள்களையும் திருக்கோயில்களையும், இறைவன் எனவே கண்டு வழிபடுவதுதான் நமது ஒழுக்கம். ஆதலின் அக்கமணியைப்பற்றிய குறிப்புக்களை ஆழ்ந்து சிந்திப்பது தகுதியேயாகும்.

உருத்திராக்கம்—சொல்லாக்கம்

உருத்திராக்கமானது, கடவுள் மணி, தெய்வமணி, கண்மணி, கண்டிகைமணி, நாயகமணி, முள்மணி, அக்கமணி, இறைவன்கண், அக்கு, ஆக்கம் என்னும் பல பெயர்களால் அழைக்கப்படும். இவை ஒவ்வொன்றும் காரணப்பெயர்கள் என்பது எளிதில் விளங்கும்.

உரு + திரம் + ஆக்கம் = உருத்திராக்கம் என்று பிரித்து உருப்பெற்ற உயிர்களுக்கு என்றும் நிலைத்துள்ள இறைவன் திருவடியை அருளும் பேராற்றலடங்கிய மெய்ப்பொருள் என்று

ஒரு சிலர் பொருள் கூறுவர். இன்னும் உருத்திரன் + அக்கம் அல்லது ஆக்கம் = உருத்திராக்கம் என்று கூறுவாருமுளர்.

உருத்திரன் என்னும் சொல், நமது சமய நூல்களிற் பல இடங்களில் வழங்கப்படுகின்றது. சிவகணங்களுக்கு உருத்திர கணம் என்றும், மயானத்திற்கு உருத்திரபூமி என்றும், இறையனார் அகப்பொருளின் தனிச்சிறப்பை மதுரையில் மறைமுகமாய் விளக்கியருளிய தெய்வீக ஊமைப் புலவர் பெயர் உருத்திர சன்மர் என்றுங் கூறுப. தேவர்கள் முப்பத்துமூவரில், உருத்திரர் பதினொருவர் (ஏகாதச ருத்திரர்) என்றும் பற்பல நூல்கள் கூறும். "விதியின் மக்களும், மாசில் எண்மரும், பதினொரு கபிலரும், தாமா இருவரும்," என்பது பரிபாடல்—௩. (பதினொரு கபிலர்—11 உருத்திரர்) "இன்னலங் கடலுட்பட்டோர் யாரையும் எடுக்கு மாற்றால், உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் எனும் பேர் பெற்றான்," என்பது கந்தபுராணம். இப்புராணத்தில் இன்னும் பல இடங்களில், உருத்திரன் என்னும் சொல் காணப்படுகின்றது. பகவத்கீதை, மகாபாரதம், உபநிடத்து, சிவாகமங்கள், இன்னும் பல நூல்களில் இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. திருக்குற்றாலக் குறவஞ்சியில், தற்சிறப்புப்பாயிரத்தில் முருகக்கடவுள் துதியில்,

"பன்னிருகை வேல் வாங்க, பதினொருவர் படை தாங்கப் பத்துத் திக்கும்" என்று கூறுமிடத்து, பதினொருவர், உருத்திரரையே குறிக்கும். உருத்திராக்கம், சிவபிரானது திருக்கண்களினின்று தோன்றியவை யென்றும், வலது கண்ணினின்று பன்னிரண்டு கபில மணிகளும், இடது கண்ணினின்று பதினாறு வெண்ணிற மணிகளும், நெற்றிக் கண்ணினின்று பத்துக் கருநிற மணிகளும் தோன்றியவை என்றும் பழங்கதைகள் கூறும். ஆகவே, உருத்திரன் என்னும் சொல்லுக்கு, பகைவரை ஒடுக்கி நலஞ்செய்பவன் என்றும் பொருள் கூறலாமா? உருத்திரனது அக்கத்தினின்றும் (அக்கம் = கண்) தோன்றிய பொருள் உருத்திராக்கம் என்றும் கூறுவர்.

உருத்திராக்கத்தின் தோற்றம்

அக்கமணி, நமது பூமியைப்போல, அண்டம் அல்லது முட்டை வடிவத்தில் (Oval shape) இருக்கும். தற்காலத்தில், இம்மணிகள், இமயமலைச் சாரலில் நேபாள தேசத்தில் ஒருவகை மரத்திலிருந்து விளைகிறதாக சொல்லப்படுகிறது. இம்மணிகளின் வெளிப்பக்கத்தில் பலாப்பழத்திலுள்ள முட்கள்போல, பல முட்கள் (Spike) பொருந்தியிருக்கும். இன்னும் இம்மணிகள், ஆரஞ்சுப்பழச் சுளைகள்போல, பலபாகங்களாகப் பிரிக்கப்

பட்டிருக்கும். இப்பாகங்களை முகங்களென்று கூறுவர். இம் முகங்கள் பொதுவாய் நாலைந்து இருக்கும்; குறைந்தும் கூடியு மிருக்கலாம்.

உருத்திராக்கம் அணிவதன் பயன்

அக்கமணிகளில், மின்சாரசத்தி போன்ற, ஒருவகைத் தனிச்சத்தியிருப்பதாக நம்முன்னோர் கண்டுள்ளார்கள். ஆதலின் அதைத் தரிப்பதனால், உடல்நலம் ஓங்குகின்றதென்று கண்டனர். இரத்தம், எலும்பு, மூளை, நரம்பு முதலிய எழுவகைத் தாதுக்களுக்கும் உறுதி கொடுப்பதாகக் கூறுவர். உருத்திராக் கத்தை, சன்னி, விக்கல், பித்தம், நாவறட்சி, சளிக்கட்டு, காமாலை, குத்திருமல் முதலிய நோய்களில், உரைத்துக்கொடுத்து குணங்கண்டனர். உருத்திராக்கத்தை நீற்றிப் பல நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்கலாமென்று சித்தர் நூல்கள் கூறும்.

உருத்திராக்கம் அணிவதெப்படி?

குழந்தைகள், பெண்கள், ஆடவர்கள் எல்லாரும் அணியலாம். அதில் ஒரு நுண்ணிய சத்தியிருப்பதால், அதைப் பட்டுக்கயிறு, செம்பு, தங்கம் முதலியவைகளால், கொடி செய்து கோத்து அணிவது வழக்கம். பொன், வெள்ளி, வில்வ ஓடு, சுரை ஓடு இவைகளினாற் செய்த வளையங்களை, மணிகளுக்கு இடையிற் கோத்துத்தான் உருத்திராக்கமாலை யணியப்பட வேண்டும்; அப்பொழுதுதான், அம்மணிகளிலுள்ள மின்சார சத்தி, உடலில் ஏறுவதற்கு இசைவாயிருக்கின்றது. பல அக்க மணிகளை (இடையில் மேற்கூறிய வளையங்களில்லாமல்) ஒன்று சேர்த்து அணிவதின் பயன் மிகக் குறைவு என்பதை அறியாதார் பலர் உளர். உருத்திராக்கத்தைப்பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்வது மிக்க பயன் தருமென்பதில் ஐயமில்லை.

உருத்திராக்கத்தை அணியும் இடங்கள்

நம் முன்னோர் அக்கமணியை, உடலின் இன்னின்ன பாகங்களில் இத்தனை யித்தனை தரித்தல் வேண்டுமென்று வரையறுத்துள்ளார்கள். இவை பல புராணங்களிற் கூறப்பட்டுள்ளன. சிவாகம, சித்தாந்த நூல்களிலும், இக்குறிப்பு காணக்கிடக்கின்றது. ஸ்கந்த புராணத்தின் சிறந்த பாகமாகிய உபதேச காண்டத்தில் உருத்திராக்கம் அணியவேண்டிய இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வுபதேச காண்டமே, சிவரகசிய காண்டத்தின் சாரம் என்பதை இங்கு நினைப்பூட்டிக் கொள்ளல்வேண்டும். அதில், உருத்திராக்கம் தரிக்கவேண்டிய இடங்கள் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன. உச்சி—1;

சிரசு—40; காது—12; கழுத்து—32; மார்பு—108; தோள் (புயம்)—32; முழங்கை—24 ஆக மொத்தம் 249. இதே கணக்கு ஆதீனங்களிலிருந்து வெளியிடப்பட்ட சித்தாந்த சைவ வினு விடையிலும் (ப. 126) கூறப்பட்டுள்ளது. காது, தோள், முழங்கை இவைகளில் குறிக்கப்பட்ட எண்களில் பாதி வலப் பக்கமும், பாதி இடப்பக்கமும் தரித்தல்வேண்டும்.

உருத்திராக்கம் அணிவதில் சில தவறுகள்

1. உருத்திராக்கம் உடம்போடு ஒட்டியணியப்பட வேண்டும்.

2. தலையில், மயிர் வளர்ந்துள்ள இடத்தின்மேல் அணிவது பயனில்லை.

3. ஒவ்வொரு காதிலும் முன்பக்கம் மூன்றும் பின்பக்கம் மூன்றுமாக அணிதல்வேண்டும்.

4. பணக்காரர்கள், பொன்னிலேயே அக்கமணி செய்து அணிகிறார்கள். இயற்கை உருத்திராக்கத்துண்டான பலன், இதற்குக் கிடையாதென்பதை அறியார்கள் போலும்.

5. உடலில் சட்டை அணிந்து அதன்மேல் உருத்தி ராக்கம் தரித்தலில் யாதொரு பயனுமில்லை.

6. உடம்பு தூய்மையில்லாத காலங்களில் உருத்திராக்கம் தரிப்பது பயன் தராது. (பூசை காலங்களிற்றான் மிகுந்த பலனைத் தரும்.) அங்ஙனம் தரிப்பதால் உருத்திராக்கத்தின் தூயசத்தி குன்றும்.

உருத்திராக்கத்தைப்பற்றிய சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

உரு—தூய தமிழ்ச்சொல்;

> உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு. —திருவள்ளுவர்.
>
> உட்பெறு புள்ளி உருவா கும்மே. —தொல்காப்பியம்.

'உரு' என்னும் சொல் வடிவு, உடல், நிறம், தாலி, கரு, சிற்ப வேலை, விக்கிரகம் முதலிய பல பொருட்களில் வழங்கப்படும். உருத்தல் என்பது வடிவங்கொள்ளுதல், சினங்கொள்ளுதல், தோன்றுதல், முளைத்தல், மிகுதல் முதலிய பொருட்களில்வரும். தமிழ்நாட்டில், இன்றும், வாழ்வரசிகள், திருமணத்தாலியை யும் மற்றும் உருக்களையும் கயிற்றில் கோத்து, கழுத்தைச் சுற்றி அணிவதும், இதைச் சுத்துரு என்றழைப்பதும் நமது மரபே

யாகும். இவர்கள் அணியும், உருக்கள் ஒவ்வொன்றுக்கும் தத்துவப்பொருள் உண்டென்பது எமது கருத்து. 'ர' என்னும் ஓசைக்கும், அங்கி, தீ, ஒளி, ஒலி என்னும் பொருட்களுக்கும் தொடர்பு உண்டென்று கூறுவர். உருத்தல் என்னும் சொல் கடுஞ்சினங்கொள்ளுதல் என்னும் பொருளில் வரும்பொழுது, அது இயற்கைக்கு ஒத்தேயுள்ளது. கோபங்கொள்ளும் ஒருவனது முகம் சிவந்து விடுகிறது (Congestion); 'முகம் நெருப்புப்போல் செக்கச்செவேல் ஆய்விட்டது' என்றுரைப்பது சாதாரண வழக்கிலும் உண்டு. ரகர ஓசையினின்றே, (Rubor) என்னும் இலத்தீன் மொழிச்சொல், (Redness)—சிவப்பு என்னும் பொருளைத் தருகிறது. (Amen-Ra) அமென்-ரா என்பது எகிப்தியர் வணங்கிய தீக்கடவுளின் பெயர். உருத்திரனது நெற்றிக்கண்ணினின்றும் நெருப்புப் பறப்பதாகச் சமய நூல்கள் கூறும். உருத்திராக்கமும், இறைவனுடைய கண்களிலிருந்து தோன்றியதாகப் புராணங் கூறும். அதனாலேயே உருத்திராக்கத்துக்கு 'இறைக்கண்' என்ற பெயரும் உண்டு. இங்ஙனமாக, உரு, உருத்தல், உருத்திரன், உருத்திராக்கம் என்னும் சொற்களெல்லாம், ஒரே வேரினின்று எழுந்தனவோ என்று நினைப்பதற்கு இடந்தருகிறது.

உருத்திராக்கமணியும் மனித உடம்பிலுள்ள எலும்புகளும்

நமது முதுகெலும்பு (முள்ளந்தண்டு) வரிசை முப்பத்து மூன்று எலும்புகளாலாயது என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. அக்கமணிகள் கழுத்தைச்சுற்றி யணியப்படவேண்டியவை முப்பத்திரண்டு என்பது மேலே கூறியுள்ளோம். 32 மணிகளுக்கும் நடுநாயகமாக ஒன்று இணைக்கப்பட்டுத்தான் அக்கமணி கழுத்தில் அணியப்படும். ஆகவே அதுவும் சேர்ந்து முப்பத்துமூன்றை நினைப்பூட்டும். மற்றொரு வியப்பான குறிப்பை இங்கு தனிப்படக் குறிக்க விரும்புகின்றோம்.

முதுகெலும்பு வரிசை எங்ஙனம் முப்பத்துமூன்று எலும்புகளாலாயதோ, அம்மாதிரியே தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களும் முப்பத்துமூன்றேயாகும். திருக்கோயில்களில், கொடிமரம் (துவஸ்தம்பம்), பூமியில படுத்துக்கொண்டு ஆகாயத்தை நோக்கி வணங்கும் தொண்டனது முதுகெலும்பு வரிசையைக் குறிக்குமென்பது ஆலய விளக்கநூல்களிலிருந்து அறிகின்றோம். இக்கொடிமரத்திலுள்ள வளையங்களும் முப்பத்து மூன்றேயாகும். கழுத்தைச்சுற்றி அணியவேண்டிய உருத்திராக்கமணிகளும் (32+1 நாயகமணி) ஆக முப்பத்துமூன்றேயாகும்.

தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 33+216 (உயிர்மெய் யெழுத்துக்கள்) ஆக 249. மனித உடலில் உள்ள எலும்பு களும் ஏறக்குறைய இருநூற்றைம்பதே யாகும். சமய விதிப் படி, ஒருவன் உடம்பு முழுவதிலும் தரிக்கவேண்டிய உருத்தி ராக்கமணிகளும் 249. இது எமக்கு ஒரு அதிசயமான ஒற்றுமையாகக் காணப்படுகின்றது. 'காக்கையும் உட்கார்ந்தது பனம்பழமும் விழுந்தது' என்னும் பழமொழி போலிருக்குமோ அறியோம். இத்தகைய ஒற்றுமை ஆராயத்தக்கது என்பதை மாத்திரம் இங்கு எடுத்துரைப்பாம்.

இறுதியாக, உருத்திராக்கங்களுக்கு முகங்கள் உண்டென்று மேலே கூறியுள்ளோம். இதிலும் ஒரு வியப்பான குறிப்பு ஒன் றுள்ளது. சாத்திர நூல்களின்படி, உடலின் இன்னின்ன பாகங்களில் இன்னின்ன முகங்களுள்ள உருத்திராக்கம் அணி யப்படவேண்டுமென்று அறிகிறோம் இதற்குச் சான்றாக உச்சி யில் (சிகையில்) அணியவேண்டிய உருத்திராக்கம், ஒரே முக முள்ளதாயிருக்கவேண்டுமாம். தலையில் அணியும் அக்கமணி பதி னொரு முகங்கொண்டதாகயிருக்கவேண்டுமென்று விதிக்கப்பட் டுள்ளது. நம் முன்னோர் காரணமில்லாமல் எதையும் செய்வ தில்லை என்பது திண்ணம். ஆதலின் ஆராய்ச்சியாளர் உடலின் பல பாகங்களுக்குத் தகுந்தாற்போல், அவைகளில் தரிக்கவேண் டிய உருத்திராக்க மணிகளும், இத்தனை முகங்களுடையதாக இருக்கவேண்டுமென்னும் பழங்கருத்துக்கு மூலகாரணமுண்டா என்பதை ஆராயவேண்டியது அவரது கடமையாகும். அக் கமணியை உடலில் அணிவதின் பெருமையையும் அதிலுள்ள விஞ்ஞானக் கருத்துக்களையும், விரிவான முறையில் எழுதுவது எமது எண்ணமாகும்; இங்கு விரிப்பின் பெருகும். யாழின் தத்துவத்தை, அடுத்து நோக்குவாம்.

மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம்

[புதுவை, வரத. வீரப்பன்]

(சிலம்பு உ௫, பரல் கக, ௫௪0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

16

வளம்பெருக்கும் பருவக்காற்றால் விளையும் வெப்பம் நண்பகலில் பொறுத்தற்கரிதாயிருக்கும்; ஆயினும், கடலிடைத் தோன்றும் இளங்காற்றால் அது மாலைப்போதில் மட்டுப்படும்; இரவில் துளித்து உடலுக்கு நலம்புரியும் பனிநீர்த்துளிகளால் அது காலைப்போதில் தணிந்துவிடும். பொதுவாக, இந்தியாவில், உதிக்கின்ற ஞாயிறும் படுகின்ற ஞாயிறும் நாடோறும் புலனாகும். ஆண்டிற்கு எட்டுத்திங்கள்களில் வானம் எப்பொழுதும் தூய்மையாகவும் மாசற்றும் விளங்கும்.

—தெலாப்ளோத்

17

இந்துஸ்தான் என்னும் பெயர் சிறப்பாகப் பொருந்தப் பெற்ற பகுதிகளில் வாழும் மக்களின் தோல் நிறத்திலும் தென்னாட்டவர் நிறம் மங்கித் தோன்றச் செய்வது, அந்நாட்டை வருத்தும் மிகு வெப்பமாகும். ஆயினும், நிலவளத்தாலும் செல்வப் பெருக்காலும் தென்னாடும் வடநாடும் சற்றேறக் குறைய ஒத்ததன்மையன; எனினும், ஏராளமான கப்பற்றுறை முகங்களுக்கும், ஐரோப்பிய நாடுகளோடு மிக விரிந்த அளவில் நடைபெறும வாணிபத்திற்கும் வடநாட்டிலும் தென்னாடே பரந்த புகழ் வாய்ந்துளது.

—அபே. குய்யோன்

18

பருவகாலங்கள் ஆட்சி செலுத்தும் நிலத்தினைத் தொடர் மலைகள் எல்லைப்படுத்துகின்றன வென்றும் இயம்பலாம். மேலும், ஒத்த இடையீட்டிலும் மிகக்குறுகிய தொலைவிலும் அமைந்துள்ள நாடுகளிலேயே, குறித்த ஒரேகாலப் பகுதியில், வேறுபட்டும் மாறுபட்டும் தோன்றும் காலத் தட்ப வெப்ப நிலைக்கு அத்தொடர்மலைகள் வரைகோலுகின்றன. குமரிமுனை முகட்டில் நிற்கும் ஒரு தமிழ்மகன் தனது வலப்புறத்தே விளங்கும் மாவட்டங்களில் வெங்கதிர் பரப்பி வெய்யோன் காய்வதையும், தனது இடப்புறத்தே உள்ளனவற்றுள் வெள்ளம் பெருக்கெடுத்தோடு மாறு மழை பெய்வதையும் ஒரேகாலத்தில் காண்கிறான். இவ்வண்ணமாகக், கீழ்த்திசையில் வேனிற்காலத்தால் நுகரலாகும்

இன்பங்களை ஒருவன் துய்க்கவும், அதே வேளையில், மேற்றிசையில் கூதிர்க்காலமும் கசிவிரைவோடு வீசும் குளிர்வாடையும் அமைதி விழையும் மீசாமனை வெருவியோடச் செய்கின்றன.

—லெகூதேப்ளேக்ச்

உ. முப்பேரரசுகள்

19

கல்வெட்டுகளால் துலக்கமுறும் தமிழ் அரசர்களின் பெயர் அட்டவணைகளும், அவர்கள் வெற்றிவாகை சூடிய போர் விளக்கங்களும், இயேசு பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகட்கு முன்னரே அசோகர் அரசியற் கட்டளைகளில் காணப்பெறும் தென்னாட்டு அரசுகளைப்பற்றிய குறிப்புகளும், பண்டைக்காலத்துச் செம்மொழிப் புலவர்கள் தமிழ்நாட்டு நகரங்கள் சிலவற்றின் பெயர்களை எடுத்தாண்டிருப்பதும், நாம் காலத்தொடக்கமாக வகுத்துக்கொண்ட காலப்பகுதிக்கு ஐந்து ஆறு நூற்றாண்டுகட்கு முன்பே தமிழகத்து அரசுகள் நிலவியுள்ளனவாகக் கொள்ளத் துணைபுரிகின்றன......

நமது காலத் தொடக்கத்திற்கு முன்னர்த் தமிழகம் சேர சோழ பாண்டியர் கோலோச்சிய முப்பெரும் நாடுகளாகப் பிரிவுற்றிருந்தது.

—குமஸ்தாவ் லெபோன்

20

வடபுலத்துறையும் தங்கள் ஒன்னலர்—ஆரியருக்கு இணையான கலைப்பயிற்சி உடைய தமிழ் இனத்தவர் வாழிடங்களாய், மக்கள் நெருக்கமும் செழுமை நலமும் பொருந்தியனவாய்த் தென்புறத்துக் கடையிற்றில் அமைந்து பழந்தமிழ் நாடுகள் பிறங்கினவாயினும், வட இந்தியா உள்ளிட்ட ஏனைய நாகரிக உலகோடு தொடர்பொன்றுமின்றித் தனித்தே நின்றன. இதனால், இவைகளைப்பற்றிய செய்திகள் பிறநாடுகளுக்கு எட்டாமற்போயின. ஆங்கே நிகழ்ச்சிகளை நிரலாகத் தொகுத்து வைப்போர் இல்லாக்குறையால், கி. பி. 900 ஆண்டுகட்கு முற்பட்டுள்ள அந்நாடுகளின் வரலாறுகள் ஒருசில நீங்கலாக, முழுமையுமே அழிய நேர்ந்தது. வியத்தகு விடாமுயற்சியுடைய வடபுலத்து மன்னன் ஒருவன், அரிதாக ஒரொருகால் தடைபுரியும் நெடுங்காட்டை ஊடுருவிச் சென்றாயினும், அன்றி, அதனைப் புறந்தள்ளி வலம்வந்தாயினும், தென்னாட்டுத் தார்வேந்தர் தம்மை மறைத்துக்கொண்டிருக்கும் 'தனிமை' என்னும் திரைச் சீலையைச் சிறிதுபோது விலக்கின், அவ் அமயம்மட்டும், கி. மு. 600-இல் இருந்து கி. பி. 900 ஆண்டுகட்கு இடையேயுள்ள

நீண்ட காலப்பகுதியில், தென்புறத்துக் கடையிற்றில் இடம் பெற்ற அரசியல் நிகழ்ச்சிகள் மிகக்குறைந்த அளவில் புலனுகின்றன.

—ஸ்மித்

21

அசோகர் காலத்தில் தமிழ் இனத்தவர் வாழ்ந்த நிலம் தனித் தனியே நான்கு அரசியல்களாகப் பிரிந்திருந்தன. அவை சோழ, பாண்டிய, கேரளபுத்திர, சத்தியபுத்திர நாடுகளெனப் பெயர்பெறும். உறையூர் அல்லது பழைய திருச்சிராப்பள்ளி, சோழநாட்டின் தலைநகராக விளங்கியது எனக் கொள்ளலாம். பாண்டியநாட்டின் தலைநகரோவெனில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையே என்பதில் ஐயுறவில்லை. துளுவ நாட்டின் தென்புறத்துள்ள மலையாளக் கடற்கரையேயன்றிச் சேரநாட்டைச் சார்ந்தனவாக இன்று கருதப்படும் உண்ணுட்டு மாவட்டங்களும், கேரளபுத்திர நாட்டுள் அடங்கியிருந்தன. துளுவமொழி பேசப் பெறுவதும், மங்களூரை நடுவிடமாகப் பெற்றதுமான குறுநிலத்திற்கே சத்தியபுத்திரநாடு எனப் பெயர் வழங்கப்பட்டிருத்தல்வேண்டும். முற்கூறிய எல்லா நாடுகளுடனும் அசோகர் எத்தகைய நட்பியைந்த தொடர்பு பூண்டிருந்தனர் என்ருல், அவர் தம் சமயநெறிகளை மக்கட்கு எடுத்தியம்ப விரிவுரையாளர்களை ஆங்குத் தம் விருப்பம்போல் அனுப்பவும், பற்பல இடங்களில் புத்தப் பள்ளிகள் எடுப்பித்தற்கும் உரிமை பெற்றிருந்தார்.

—ஸ்மித்

22

முப்பெரும் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் முறையே தமிழகத்து மேற்கும் கிழக்கும் தெற்கும் ஆகிய பகுதிகளைப் பங்கிட்டுக்கொண்டாரெனப் பண்டுதொட்டு வழங்கிவரும் நாட்டுக் கதையை, ஆய்ந்து கண்ட முடிபுக்கு முரணுக வரலாறும் உறுதிபடுத்துகிறது. கி. மு. 3-ம் நூற்ருண்டின் நண்பகுதியில் அசோகர் விடுத்த விளம்பரங்களில் இம்மூன்று நாடுகளின் பெயர்கள், கேரளா, பண்டா, சோடா என்ற எழுத்துருவங்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. கி. மு. 302-இல், மெகாஸ்தெனஸ் பாண்டியநாட்டினைப்பற்றிக் கூறிப் போந்தார். பின்னை நாளில், கிரேக்கிய உலக நூலாசிரியர்கள் இம்மூன்று நாடுகளைப்பற்றி நாம் மேற்கண்டவாறு புனைந்துரைப்பர். பாண்டிய மன்னர்களுள் ஒருவர் அகஸ்டஸின் அரசவைக்குத் தமது அயல்நாட்டரசியலேவலாளரை அனுப்பி வைத்த செய்தியை ஸ்ட்ராபோன் (XV-1-4) குறிப்பிடுகிருர்.

இன்று மலையாள மொழி வழங்கும் நிலம் சேரநாட்டினைச் சேர்ந்திருந்தது. கரூர் சேரநாட்டின் தலைநகராயும், மதுரை பாண்டிய நாட்டின் தலைநகராயும், உறையூரும், பின்னர் மலைக்கோட்டமும், இதன்பின்னர்த் தஞ்சையும் சோழநாட்டின் தலைநகராயும் விளங்கின........

ஆராய்ச்சிக் கெட்டிய அளவில், இம்முடிவேந்தர் மூவரும் ஒருவர்மீதொருவர் இடையீடின்றிப் போர் தொடுத்தவண்ணம் காலங்கடத்தினர் என்று கருத இடமுண்டு. சேரநாடு பிளவுற்றுத் தன்னிலையிற் சுருங்கிய பின்பு கொங்குநாடெனப் பெயரேற்றதோடு முதன்முறையாகச் சோழர்களால் வெல்லப்பெற்று, 1080-இல் முடிவாக மைசூர் ஒய்சால வல்லாளர் ஆட்சியுட்புகுந்து ஒன்றுபட்டது. முகமதிய படையெழுச்சிக்குப்பின், சேர சோழ பாண்டிய நாடுகள் பல்வேறு சிற்றரசுகளாகச் சிதைவுற்றன.

—ழுய்லியேன் வென்சோன்

௨௩. பண்டைத்தமிழகத்துத் தலைநகர்கள்

23

தாம்பிரபரணியாற்றுக்கு அருகமைந்த கொற்கை முத்து வாணிபத்திற்கு முதன்மையானவிடமாக விளங்கியது. காவிரியாற்றின் தமிழகத்தின்கண், இடம்பெற்ற புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம், ஒருகாலத்தில் செல்வச் சிறப்பும் செழுமை நலமும் வாய்ந்த துறைமுகமாகத் துலங்கியது.......

இந்தியாவின் தென்கடையீற்றில் வீற்றிருந்த தமிழ் அரசுகள், சீர்சிறக்க நடைபெற்ற வெளிநாட்டு வாணிபத்தால் விளைந்த பொருள் வளமும், நிலவளமும் பல்கிப் பெருக விளங்கலுற்றதோடு இம்மை நலங்கள் மல்கும் உயர்வாழ்வின் மேன்முகட்டை அவை தலைநகரிலேயே எய்தப்பெற்றன......

சோழர்கள் நிகழ்த்திய நீர்வாணிகத்தில், பருத்தி நூலாடை முதற்பொருளாக மிளிர்ந்தது. இதற்கென இவர்கள் வைத்து நடாத்திய சுறுசுறுப்புள்ள கடற்படை, ஐராவதி கங்கைக் கழிமுகங்கள் மட்டுமேயன்றி மலேயத்தீவத் தொகுதிவரை பாய் விரித்தேகவும் அஞ்சிற்றில்லை.

—ஸ்மித்

24

பிளினி உயிர் வாழ்ந்த காலத்தில், கி. பி. முதலாம் நூற்றாண்டில், மதுரை அல்லது கூடல் தலைநகராக விளங்கியது.

ஆயினும், இன்னும் முன்னைய நாட்களிலே கொற்கை முதன்மையான அரசிருக்கையாகப் பிறங்கியது என்று நம்புதற்கு இடம் உண்டு. வரலாற்றுக் காலத்திற்கு முன்னர், மதுரைமாவட்டத்தின் கிழக்குக் கடற்கரையில் அமைந்த தென்மணலூர் என்னும் ஓரிடம் பாண்டிய மன்னர்களின் தலைநகராக இருந்ததெனக் கொள்ளுதற்குச் சான்றுளது. கொற்கை அல்லது கொல்கை (கிரேக்கிய மொழியில் காணப்படுவதுபோல்) மாநகரைத் தமிழர் நாகரிகம் வளர்ந்த தொட்டிலாகவும், சேரசோழ பாண்டிய அரசுகளை நிறுவினோராகக் கருதப்படுபவரும், புராணத் தொடர்புடையருமான உடன் பிறப்பாளரின் பிறப்பகமாகவும் பிறங்கியதெனத் தொன்று தொட்டு வழங்கும் நாட்டு வரலாறுகள் யாவும் குறிப்பிடுகின்றன. திருநெல்வேலியிலே, தாம்பிரபரணி யாற்றங்கரையிலே, இன்று ஏதும் அற்ற சிற்றூராகக் காட்சி நல்கும் அம்மாநகர், தனது ஓங்குபுகழ் உயர்வாழ்வில் திளைத்தொளிர்ந்த நாளிலே. சிறந்ததொரு துறைமுகமாகத் துலங்கியதோடு, பாண்டிய அரசர்கள் நலமுற ஈட்டிய பொருட் செல்வத்திற்குத் தனிப்பட்ட வருவாயாக இருந்த முத்துவாணிபத்திற்குத் தலைமைப் பதியாகவும் நிலவியது. மிகுந்த அளவில் வந்து குவிந்த அரசிறைப் பொருள்களையும், பண்டமாற்று ஊதியங்களையும் கண்காணித்தற் பொருட்டுப் பட்டத்திளவரசர், மதுரையில் அரசவை நிறுவப் பெற்ற காலத்தும், கொற்கையிலேயே தங்கியிருந்தார். கொற்கைமாநகரின் துறைமுகம் நாளடைவில் மண் மண்டியதால் கப்பல்களை வரவேற்கும் வசதியை இழந்து இங்கிலாந்தின் செய்ங்க்துறை முகங்களைப் போல் படிப்படியாக அழிவடைந்தது.

கொற்கை, துறைமுகமாகப் பயன்படுவதொழிந்து கைந்நெகிழ விடப்பெற்றது எந்நாள் தொட்டு என்பது வரையறுக்க இயலவில்லையாயினும், அந்நாட்டு நாணயவெளியீட்டுக் கூடத்தினின்று வெளிப்போந்துலவிய காசுகள் ஏறக்குறைய கி. பி-700 ஆம் ஆண்டிற்கு மேற்பட்டவை யென்பது உணரக் கிடக்கிறது.

—ஸ்மித்

25

கொற்கையில் நிகழ்ந்த வாணிபத் தொடர்புடைய வினைகள் அனைத்தும், ஆற்றுக்குக் கீழ்பாலில், மூன்றும் மைலில் அமைந்த காயலில் புதுவதாக நிறுவப்பட்ட துறைமுகத்திற்கு மாற்றப்பெற்றன. காயல் பலநூற்றாண்டுகள்வரைக் கீழ்நாட்டு மாபெரும் வாணிகத் தலைமைப் பதிகளுள் ஒன்றாக விளங்கிவந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில்

மார்க்கோ போலோ இங்கே தான் வந்திறங்கினர். அவர் இங்குவந்தமை ஒருமுறை மட்டும் அன்று என்று கோடல் பொருத்தமுடையதாகும். முடிமன்னனே யன்றிக் குடிமக்களும் எய்தப் பெற்றிருந்த செல்வச்சிறப்பையும் புறக்கோல மேன்மையையும் வந்தவர் கண்கண்டு வியந்தார். கொற்கையைப் பாழாக்கிய அதே நிகழ்ச்சி காயல் கைவிடப்பட்டதற்கும் காரணமாக நின்றது.

மீன் பிடித்துப் பிழைக்கும் ஒருசில முகமதியர், கிறித்துவ சமயம் தழுவியோர் வாழும், பாழும் குடிசைகளே காயல் விளங்கிய இடத்தில் இன்று காட்சியளிக்கின்றன.

—ஸ்மித்

26

காவிரியாற்றின் வடபுறத்துக் கழிமுகை மருங்கே அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினம், சோழரின் தலைமைத் துறைமுகமாகத் திகழ்ந்தது. இதன்கண் அழகிற் சிறந்த மாளிகையொன்றை அரசர் எடுப்பித்துக் காத்துவந்தனர்; மேலும், அயல்நாட்டு வணிகர் இதனை இனிமையும் பயனும் அளிக்கும் உறைவிடமாகக் கருதுவாராயினர். ஒருகால், செல்வச்சிறப்புடையதாய் மிளிர்ந்த இந்தவளநகர் அழிந்தொழியவும், அவ்விடம் இன்று உயர்ந்த மணற்குவியலின் கீழ்ப்புதைந்து கிடக்கிறது.

—ஸ்மித்

27

சென்னைப்பட்டினம் மிகவும் பழைமையான நகராகும். பென்னன்ட் கூறுவதுண்மையாயின், உரோமையர் ஆங்கு அடுத்தடுத்து வருவதும் போவதுமாயிருந்தனர் என்பதை அறியலாம். போஸ்தின் (உரோமைய அரசி. கி. பி. 125-176), அத்ரியேன் (உரோமைய மன்னர் மன்னன். கி. பி. 117-138), இவர்களின் உருவங்கள் பொறிக்கப் பெற்றனவும், நகரின் சுற்றுப் புறங்களில் காணக்கிடந்தவையுமான சில செம்பொற் காசுகளையும் வெண்பொற் காசுகளையும் இவர் தமது கூற்றுக்குச் சான்றாகக் கொள்ளுகிறார்.

—தெமர்லே

2. மக்கள்

அ. தமிழர் நாகரிகம்

28

ஆரியர் திராவிடரோடு போரிடநேர்ந்த காலத்து, இராமாயணக் கதைகளின்படி, பின்னவர் ஓர் உயரிய நாகரிகமுடை

யராய்த் திகழ்ந்தனர். உலோகங்களைப் பண்படுத்தவும் ஆடைகள் நெய்யவும் மட்கலங்கள்வனையவும் அவர்கள் அறிந்திருந்ததோடு, எழுத்துக்கலையிலும் தேர்ச்சியுடையராய் விளங்கினர். அவர்கள் பேசியமொழிகள் வடமொழியுடன் தினைத்துணையும் தொடர்பு இல்லாதவை. சமஸ்கிருதம் என்று ஒருமொழியும் இருப்பதாக வெளியாவதற்கு முன்னரே அம்மொழிகள் மேற்புலத்து அறிஞர் ஆராய்ச்சிக்கு இலக்காயிருந்தன.

—குய்ஸ்தாவ் லெபோன்

29

மிகப்பழைய் காலத்தே தமிழ்நாட்டு அரசுகள் தங்கட்கே உரிய நாகரிகத்தில் திளைத்தொளிர்ந்தன; மேலும், மேற்புலத்தோடு வளர்ந்தோங்கும் வாணிபம் நிகழ்த்தின. தமிழ் நாட்டினின்று ஏற்றுமதியாகிய மிக்க பயன்தரும் சரக்குப்பொருள்கள், முத்து, கடல்வன்னக்கல், மிளகு இவைகளாகும். தென்னாட்டிலிருந்தே இந்தியத்தேக்குமரம், மஸ்லின் ஆடை இவையிற்றினைப் பாபிலோனியர் தங்கள் நாட்டிற்கு எடுத்தேகினர் என்பது தெளிவாகிறது. பின்னைநாளில், கிரேக்கிய உரோமைய பேராட்சிகளின் கீழ் நடுநிலத்துக் கடற்றுறைமுகங்கள் தென்னிந்தியாவுடன் விரிந்த அளவில் வாணிபம் நடாத்திவந்தன. அவண் உரோமைய நாணயங்கள் வழங்கலுற்றன. தமிழ்நாட்டுத் தார்வேந்தர் தமது போர்ப்படைகளில் ஐரோப்பியப் போர் மறவர்களைச் சேர்த்துக் கொண்டனர். உரோமையர் ஆங்கே குடியேறித் தங்கிய உறைவிடங்களின் சுவடுகள் இருத்தல் கூடும்.

—பர்னேட்

30

தமிழர்நாகரிகம், வடநாட்டு இந்திய ஆரியப்பார்ப்பன நாகரிகத்திற்கு ஒத்த காலத்தது; அன்றேல் அதனினும் பழைமையானது என்பதில் ஐயுறவில்லை. தமிழ்நாட்டிலே நெடுநாட்கள்வரை பார்ப்பன நாகரிகம் உறுதியுடன் எதிர்க்கப்படவேண்டியதாகவும், வரவேற்கப்படாமலே வலியவந்து நுழைந்த தொன்றாகவும் கருதப்பெற்றது.

—ஸ்மித்

(தொடரும்)

அறன் வலியுறுத்தல்!

[தி. ச. வாசுதேவன்]

இராகம் : பூர்விகல்யாணி. தாளம் : ஆதி.

எடுப்பு

அகத்தினில் அறநெறி இருத்து—தமிழா
அருங்குறள் கூறிடும் திருவுடைக்—கருத்து (அ)

தொடுப்பு

இகத்தினில் ஈடிலா இன்பமே வேண்டும்
என்றுநீ விரும்பிடில் நன்றே யாண்டும் (அ)

முடிப்பு

சிறப்புடன் செல்வமும் செறிந்திட வகையாய்
தெரிந்தே அறந்தனைச் செய்திடு தகையாய்
விறப்பும்[1] வாழ்விலே மிகவும் [2]நகையாய்
விளங்கிடக் களங்கம் வீழ்த்தியே மிகையாய் (அ)

---

1. விறப்பு=வெற்றி.
2. நகை=மலர்ச்சி

அருள் பத்து

[சித்தாந்த பண்டிதர், கழகப்புலவர், ப. இராமநாத பிள்ளை]

(செல்வி சிலம்பு-௨௫, பரல்-௪, பக்கம் ௧௮௪-ன் தொடர்ச்சி)

"நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாம் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்
துறையிற் செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே."

(ஆளுடைய அடிகள் திருவாசகம்: 2)

ஆண்டவன் அருளால் ஐந்தொழில் கூத்து அருளுகின்றான். இயல்பாகவே கட்டற்றவனாகவும், (ஊழிமுடிவில் உலகுடல்களை ஒருத்தனாய் நின்று ஒடுக்குவன்; ஒடுக்கிய காலத்து எல்லாப் பருப்பொருள்களும் வெந்து நீறாய் நுண்பொருளாய் ஒடுங்கும்; அவ்வொடுக்க வுருவகமே திருநீற்று உருவகமாகும்; அத்)திரு நீற்றை அணிபவனாகவும், அறிவடையாளமாகிய நெற்றிக் கண்ணை உடையவனாகவும், விண்ணுள்ளோர் தலைவனாகவும் விளங்குகின்ற விழுத்தவ முழுமுதலே! ஒப்பில்லாத ஒரு தனிச் செம்பொருளே! உன்னை ஒலமிட்டு உரக்கக்கூவி உலகெலாம் தேடியும் காணேன். திருந்திய பெருந்துறையில் பொருந்திய குருந்தமர நீழலில் ஆசிரிய அருட்கோலத்துடன் விளங்கிய அழிவில் செல்வமே! நின்னால் ஆட்கொள்ளப்பட்டு மீளா அடிமையாம் அடியேன் பெருவிருப்புடன் அழைத்தால் அஞ்சலென்று அருள்செய்யவேண்டுவது நின் அருட்டகைமையன்றோ?

நிருத்தன் - கூத்தியற்றுபவன். கூத்து, ஓரிடத்துப் பலர் ஒருங்குகூடி காண்டற்கரிய கவினுறு காட்சிகண்டு கண்ணு மனமும் ஒண்மை அறிவும் ஒருங்கியைந்து நண்ணரிய இன்பமுற்று வாழ்வதற்கு என்றும் இடம் தருவது. 'கூத்தாட்டவைக்குழாம்' என்னும் திருமறையும் காண்க. உலக மக்கள் செய்யுங் கூத்துக்குக் காலமும் இடமும் வரையறையுண்டு. ஆண்டவன் செய்யும் அருட்கூத்துக்கு அவையின்று.

ஆண்டவன் அருளம்மைகாணத் திருச்சிற்றம்பலத்தின்கண் பல்லுயிரும் சொல்லரிய இன்பெய்த ஐம்பெருங் கூத்தியற்றுகின்றான். ஐம்பெருங் கூத்தென்பது படைப்பு, காப்பு, துடைப்பு, மறைப்பு, அடிச்சேர்ப்பு (அருளல்) என ஆகும்.

இவை முறையே நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூதக் குறிப்பும் ஆகும். இவ்வைம் பெருந்தொழிலின் அடையாளங் களே தில்லைப் பெருங்கூத்தனார் திருமேனித் திருவுருவக மாகும்.

கூத்தனார் திருவுருவை மனக்கண்ணின்முன் நிறுத்திக் காண்மின்; நீட்டிய வலக்கையில் உடுக்கும், இடக்கையில் தீயும், ஆர்ந்த வலக்கையில் அமைவும், சார்ந்த இடக்கையில் சுட்டும், அழுத்திய வலத்தாளில் மறைப்பும், எழுப்பிய இடத்தாளில் அருளலும் குறிக்கப் பெறுகின்றன. படைத்தல், காத்தல், துடைத்தல் மூன்றும் பெரும்பாலும் உடலின்கண் நிகழ்த்துவிக் கும் ஒழுகலாறாகும். அக்குறிப்புத் தோன்றவே ஒழுகலாற்றை உணர்த்தும் கை என்னும் சொல்லுக்குரிய திருவுறுப்பில் அமைத்துக் காட்டியருளுகின்றனன். மறைத்தலும் அருளலும் உயிரின்கண் நிகழ்வன. உயிரை வழிநடத்துவதே உடையானின் திருவருள். வழி நடத்துவது என்னும் வாய்மை தெற்றெனப் புலனாகத் திருத்தாளின்கண் வைத்தருளுகின்றான். கைப்பெருக் கம்போல் கால்பெருக்கம் எத்திருவுருவிலும் காண்டலின்று, என்னை? வழி இரண்டேயாகலின். அவை, மருளியல் வழியும் அருளியல் வழியும் என்ப. மருளியல் வழியென்பது உலகிய லாகும். அருளியல் வழியென்பது வீட்டியலாகும். இருவேறு வழிகளையும் உடங்கியைந்து இயக்குவது இருவேறு வடிவின் ஒருபேர் யாக்கை எம்மான் திருவருளேயாகும். அதனால் இவ் வருப்பெருந் தொழிலிரண்டையும் தம் திருவடியுறுப்பு இரண்டி னாலும் விளக்கியருளினன். அம்மட்டோ மேற்குறித்த அழிவு பாடுடைய யாக்கையின்கண் நிகழும் முத்தொழிலையும் முக்குண வயப்பட்ட முத்தேவர் வேட்கைதீர அத்தேவர்மாட்டு அருளால் ஆக்கி அமைகின்றனன். ஏனை இரு தொழில்களையும் எண் குணம் கைவரப்பெற்றுத் தன்னேர் நிலைக்களத்துள்ள வேட்கை சேர் உயிர்கள்மாட்டு விடுத்தருள்கின்றனன்.

வீடுபேற்றின் கண்ணும் உயிர்களுக்கு 'உண்டியும் வினையும்' உண்டென்பதை உணர்த்தவே திருவடியும் திருக்கையும் ஆகிய இரண்டு திருவுறுப்புக்கள் ஒருங்கமைத்துக் காட்டி அருளுகின்ற னன். திருவடியே பேரின்பமாகிய உண்டி; திருக்கையே அப் பேரின்பத்தை நுகர்விப்பதாகிய திருவினை. இவ்வுண்மைகளை நினைவிலிருத்திக்கொள்ளச் செழும்பொருள் நூல் பதினான்கனுள் ஒன்றாகிய உண்மை விளக்கத்தின்கண்:

"தோற்றந் துடியதனிற் றோயும் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." —உண்மை விளக்கம், ௩௬.

என்னும் திருப்பாட்டு நன்கு தணைபுரியும்.

நிமலன் - மலமில்லாதவன். கடவுள் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவன். உயிர்கள் இயல்பாகவே பாசங்களோடு தூங்கியவை. இதற்கு எடுத்துக்காட்டாக 'நெல்லிற்குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்' சொல்லுவர். அம்மலம் ஆண்டவனைப் பற்றாமைக்கு எடுத்துக்காட்டாகக் கடல்வெளியைச் சொல்லுவர் கற்றறிந்தோர். கடல்வெளி என்பது கடலுக்கு இடங் கொடுத்துக்கொண்டிருக்கும் வெளியை. வெளி யென்பது ஆகாயம். கடல் என்பது நீரும் நிலமும். இவ்வுண்மை:

> " மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாதல்
> அஞ்ஞான முள்ள மணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
> தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
> றானே யுளமுணவாய்த் தான்."
>
> —சிவஞானபோதம், எ: ௩ - ௩.

என்னும் திருப்பாட்டானுணரலாம்.

நீற்றனே - என்பது திருவெண்ணீ றணிந்த திருமேனியை உடைய சிவபெருமா னென்பதாகும். பருப்பொருளெல்லாம் தீயால் நீற்றப்பட்டுப் பண்டையவுருவும் நிறமும் மணமும் பிறவும் மாற்றப்பட்டு எல்லாம் ஒருருவாய் ஒருநிறமாய்க் காணப்படுவது திருவெண்ணீறு ஒன்றில் மட்டும்தான். எனவே, அஃதொன்றே நிலையாமை உணர்வை எழுப்பி அதன் வழியாக உண்மை உணர்த்தும் வண்மையுடையதாகும். இதுவே தொன்மைத் தமிழகச் செந்நெறித் திருவடையாளமாக என்றும் நின்று நிலவிவருகின்றது.

வினைமாசுடன் கூடிய வாலாமாயை (அசுத்தமாயை) திருவருள் ஞானத்தீயால் தெறப்பட்டுத் தூமாயைவண்ணமாம் நிலையே திருவெண்ணீற்றின் உருவகமாகும். நிலையாமை உணர்ச்சி கைவந்தாரே மெய்யுணர்வுநெறியிற் சென்று சிறப்பென்னும் செம்பொருளை மணந்து பிறப்பென்னும் பேதைமை நீங்கப்பெற்று என்றும் ஒரு தன்மையராய்ப் பேரின்பம் உற்றுப் பெருவாழ்வு பெறுவர். இவ்வுண்மைகள் :

> " நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை." —திருக்குறள்: ௩௩௧.

> " பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
> மருளானும் மாணாப் பிறப்பு." —திருக்குறள்: ௩௫௧.

> " பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு." —திருக்குறள்: ௩௫௮.

என்னும் தெய்வப் பொதுமறைத் திருப்பாட்டுக்களால் தெளியலாம். மேலும்,

"பூச வினியதும் நீறு புண்ணிய மாவதும் நீறு
பேச வினியதும் நீறு பெருந்தவத் தோர்களுக் கெலலாம்
ஆசை கெடுப்பதும் நீறு அந்தம தாவதும் நீறு
தேசம் புகழ்வதும் நீறு திருஆலவா யான்திரு நீறே."
—ஆளுடையபிள்ளையார் தேவாரம்: ௫.

என்னும் திருநெறித்தமிழாம் சிறப்புத் திருமறைத் திருப்பாட்டானும் உணரலாம்.

நெற்றிக்கண்ணனே - என்பது அறிவடையாளமாம் நெற்றிக்கண் உடைய பற்றற்ற பழம்பொருளே என்பதாகும். "நுதலது இமையா நாட்டம்" என்னும் சான்றோர் திருமொழியும் வலியுறுத்தும். 'பிறவாயாக்கைப் பெரியோனு'கிய சிவபெருமானுக்கு 'முக்கட் செல்வர்' என்னும் முதுமறையும் உண்டு. மூன்று கண்ணென்னும் உருவகம் ஆற்றல், அறிவு, அன்பு என்னும் முப்பண்புகளையும் குறிப்பதாகும். ஆற்றல் காப்பினையும், அறிவு துடைப்பினையும், அன்பு படைப்பினையும் குறிப்பனவாகும். துடைப்பென்பது பற்றறுதியேயாகும். பற்றே காமமென்ப. இவ்வுண்மையே நெற்றிக்கண்ணுல் காமன் 'காயப்பட்டான் என்னும் உருவகம் உணர்த்துவதாகும்.

ஒருத்தனே - என்பது ஒப்பில்லாத ஒரு முழுமுதலே என்பதாகும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்" என்பதே செந்தமிழ்ச் சீரியோர் முந்துறக்கண்ட முழுவுண்மையாகும். கடவுள் ஒன்றேயாயினும் ஆற்றல், அறிவு, அன்பென்னும் மூவா முப்பண்புகள் பேசப்படுகின்றமையால் திருக்கோவில்களில் திருவுருவங்கள் பலவாக அமைக்கப்படுவவாயின. ஆற்றலே அம்மையாகும்; அறிவே அப்பனுகும்; அன்பே பிள்ளையாகும். இவ்வுண்மை தெரிப்பான் எல்லாத் திருக்கோவில்களிலும் அம்மையப்பபிள்ளை (சோமாஸ்கந்தர்) திருவுருவமே திருவிழாவின்போது திருவுலாக்காட்சி யளிப்பதாகும்.

அறிவு ஆற்றலை மணக்கும்; ஆற்றல் அறிவினை நோக்கும்; அறிவு ஆற்றலை மலர்விக்கும். இவ்வுண்மை புலப்படவே திருக்கோவில்களில் ஆண்பால் திருவுருவங்களைப் பெண்பால் திருவுருவங்கள் நோக்கி நிற்றலும், ஆண்பால் திருவுருவங்கள் பெண்பால் திருவுருவங்களை நோக்கிமுற்றலும் ஆக முன்னோர்கள் அமைத்துள்ளனர். அறிவும் ஆற்றலும் செறிந்தநிலையே அன்பாகும். அன்பு சென்றவிடத்தே அறிவும் ஆறறலும் சென்று தொழிற்படும். அன்பு என்றும் ஒருபடித்தாகவிருக்கும். அறிவும் ஆற்றலும் ஒன்றனுள் ஒன்றடங்கி அகம் புறமாய் ஏறியும்

இறங்கியும் இருக்கும். அன்பு செல்லுமிடம் உயிர்களின்பாலாகும். உயிர்கள் பலவாதல் நோக்கிப் பிள்ளைகளையும் பலவாக வுருவகஞ் செய்தனர். அவ்வுண்மை மூத்த பிள்ளையார் இளைய பிள்ளையார் என்னும் இருவேறு நிலையின் திருவுருவால் உணரலாம்.

ஆற்றலின்வழி, அறிவு செல்லுதல் அன்பு நெறியாகும்; இதுவே இல்லறம். அறிவின் வழி, ஆற்றல் செல்வது அருள் நெறியாகும்; இதுவே துறவறம். இல்லறத்தாரைத் துறவறத்தில் புகுத்துவதும், துறவறத்தாரைத் திருவடியிற் புகுத்துவதும் சிவபெருமானின் திருவருட் செயலாகும். இவ்வுண்மை தேற்றவே அன்புநிலையாம் இளைய பிள்ளையார் (திருமுருகன்) ஐம்புல வேடருட்பட்ட வள்ளிநாச்சியாரையும், ஐம்புலச் சூழலகன்று செம்புலச் செல்வியாய்த் திகழும் தெய்வநாச்சியாரையும் திருமணஞ்செய்து திகழும் சிறப்பினைச் சித்திரிப்பாராயினர். இவ்வுண்மை யுணராப் பொருவில் மாக்கள் இருமனைவியர் கொண்டனன் எம்மானென இசைப்பர். அஃது, உயர்ந்த உலகவழக்கொடும் நூல்வழக்கொடும் மாறுபட்டார் கூற்றேயாம் என்க.

ஏனைய திருப்பாட்டுக்களையும் இவ்வாறு உய்த்துணர்ந்து கொள்க. இதுகாறும் கூறியவாற்றால் கடவுள் ஒருவனே எனவும், உயிர்கள் பல எனவும், கடவுள் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியிருந்தானெனவும், உயிர்கள் இயல்பாகவே பாசங்களோடு தூங்கியிருந்தன வெனவும், பாசங்களினின்றும் விடுவிக்கக் கடவுள் உயிர்களுக்கு உலகுடல் உண்பொருள்களை உள்ளதாகிய மாயையினின்றும் படைத்துக் கொடுத்தனன் எனவும், உடலுடன் பொருந்திய வுயிர்கள், யான் எனது என முனைத்து இருவினையும் செய்து இன்பதுன்பங்களை நுகரும் எனவும், அது மெய்யுணர்வு கைவந்தபொழுது அகலும் எனவும், பின் அருள் முனைப்பால் ஆண்டாற் கடிமைபூண்டு இறைபணியியற்றி நிறைவாழ்வு எய்துமெனவும் விளக்கியதாகும்.

பாடிப் பலநாள் பயின்றதற்பின் மூவரடி
நாடினரே நம்மடிகள் நாயனருள்—கூடியதும்
வீடே விழைந்துள்ளார் வேண்ட இருந்தவவர்
ஏடே முழுக்கனிவாம் இங்கு.

ஒன்றால் உயிர்கள் உலகம் உணர்த்தியங்கும்
நன்றாக ஈரிடத்தும் நாமடிமை—பொன்றாவே
தோன்றுமொடுங் கும்மாயை சொல்லிலந்தால் வீடுண்டாம்
தோன்றுமிடம் மூன்றிற் றெழு.

"ஓடங்கள் ஆற்றில் ஓடுகின் றனவே!"*

[வித்துவான், கோ. வே. பெருமாள், கோபால சமுத்திரம்]

ஓடங்க ளாற்றில் ஓடுகின் றனவே!
நாவாய்கள் கடலில் மேவுகின் றனவே!!
ஆயினும் இவற்றின் அழகாய் இயங்கும்,
மேகங்கள் வானில் ஏகுகின் றனவே!!!
பாலங்கள் ஆற்றில் கோலங்கொள் காட்சி,
மாலின்பம் யாவினும் மேலாம் மாட்சி!
ஆயினும், இவற்றின் அழகாய்—வானில்
மரங்களின் மேலாய்ப் பிறங்கிடும் பாலம்
மண்ணி லிருந்து விண்ணி லேறும்
பண்ணிய வழியாம் கண்ணெழில் வானவில்!!
வயங்கித் தோன்றி மகிழ்ச்சியூட் டுவதே!!!
எனவே,
செயற்பொருள் யாவினும், இயற்கை எழில்கள்
கவர்ச்சிப் பொருளாய்க் காணுகின் றனவே!

"அன்புச் செயல்கள்"†

இனிய நிலப்பரப்பும், எல்லையிலாப் பெருங்கடலும்,
சிறிய மணன்மணியால், நீர்த்துளியா லானதன்றோ?
என்றுமே அழியாத எல்லையிலாப் பேர்யுகங்கள்,
சின்னஞ் சிறுநேர மாத்திரையா லானதன்றோ?
இவைபோன்றே,
அன்புச் சிலமொழிகள், அருளார்ந்த சிறுசெயல்கள்,
இன்பத் திருவுலகை எழில்பூக்க வாக்காதோ?

---

* திரு. 'கிருசிடினு உரோசட்டி'—என்னும் ஆங்கிலப் பெண் கவிஞரின், 'Boats sail on the rivers'—என்னும் ஆங்கிலச் செய்யுளின் மொழி பெயர்ப்பு.

† இது, திரு. 'ஈசாக் வாட்சு' என்னும் ஆங்கிலக் கவிஞரின் 'Kind deeds'—மொழிபெயர்ப்பு.

செய்திகளும் குறிப்புக்களும்

மறைமலையடிகளார் திருநாள்

கோவை அருட்கலைக் கழகச் சார்பில் 15—7—'51. ஞாயிற்றுக்கிழமை மாலை 'யூனியன் உயர்நிலைப்பள்ளிக் கலைமண்டபத்தில்,' அடிகளார் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அறநிலைய உதவி ஆணையாளர், உயர் திருவாளர், ம. ரா. சண்முகசுந்தரம், பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமை பூண்டுள்ளார்கள். 'அடிகளாரின் படத்திறப்பு,' உயர்திரு. ஆசிரியர், ச. அய்யாசாமிப் பிள்ளையவர்கள், 'அடிகளின் அருங்குணங்கள்,' கோவை கூட்டுப் பதிவாளர் உயர்திரு. I. G. இராமநாதன் அவர்கள், 'அடிகளார் மாட்சி,' உயர்திரு. J. S. கண்ணப்பர் அவர்கள், 'அடிகளாரும் தமிழும்' என்பனபற்றி, கோவை அரசியலார் கல்லூரி உயர்திரு. புலவர் ப. சுப்பிர மணியம் அவர்கள் ஆகிய செந்தமிழ்ச் சான்றோர்களாலும் செவ்வனே விரிவுரை நிகழ்த்தப்பெற்றன.

திருமுறைப் பெருவிழா

திருநெறியின் உயிராய்ச் செந்தமிழின் உளமாய்த் திகழும் திருமுறைகள் பன்னிரண்டு. அம்முறைகளை நாளும் போற்றி ஓதியுய்ய வேண்டுவது செந்நெறிச் செல்வாரின் சீரியகடன். அம்முறையைப் பெருமக்கள் உளங்கொள இத்தகைய திருவிழாக்கள் எங்கும் என்றும் நிகழ்வன. 6, 7, 8-7-'51-மூன்று நாட்களும் இவ்விழா திருக்கழுக்குன்றத்தில் சிறப்புற நிகழ்ந்தது. இரண்டு நாட்களும் விழாவில் கலந்துகொண்ட ஆயிரக் கணக்கான மெய்யன்பர்களுக்கு வண்ணை வள்ளியம்மையாரவர்கள் திருவமுதளித்து நல்விருந்து பேணினர்.

விழாநிகழ்ச்சி :—மூன்று நாளும் முறையே திருப்புகழ்மணி T. M. கிருட்டிணசாமி ஐயரவர்கள், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார்கள். தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாத ஐயரவர்கள், திருமுருக, கிருபானந்தவாரியாரவர்கள், புலவர், திரு. முருகவேளவர்கள், தேனூர் வரகவி, சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், இராசகோபால் பிள்ளையவர்கள், கயப்பாக்கம், திரு. சோம சுந்தரம் செட்டியாரவர்கள் ஆகிய அறிவுடைச் சான்றோரும் பிறரும் விரிவுரையாற்றினார்கள்.

முதல்நாள் அம்மை திருக்கோலக் காட்சி, இரண்டாம் நாள் திருமுறை ஓதித் திருப்படிவிழா, மூன்றாம் நாள் திருநெறித் தலைவர் நால்வர் திருவுருவங்களோடு திருமுறைகளையும் யானைமேல் அணிபெற ஏற்றுவித்து, ஆயிரக் கணக்கான மெய்யன்பர்களும் தாய்மார்களும் நீற்றுப் பொலிவும் வேற்றுரைவிரவாத் திருமுறை முழக்கமும் போற்றிப் புடைசூழ்ந்து வர, மலை வலம்வரும் உலாக்காட்சிகள் செவ்வனே நிகழ்ந்தன.

பல ஊர்களினின்றும் வந்துள்ள திருமுறைக்கழகத் திருக்குழுவினரின் திருமுறை ஓதுதலும், புதுவை திரு. விநாயகமுதலியாரவர்கள், திரு. C. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் நிகழ்த்திய இசையரங்குகளும் பாராட்டத் தக்க முறையில் நிகழ்ந்தன.

திருக்கோவி லெல்லாம் திருமுறைகள் ஓத
வருநாளே நன்னாளாம் வாழ்த்து.

அமெரிக்கக் கல்வி நன்கொடை

அமெரிக்க அரசியலார் தம் நாட்டுக் கல்வியை அளவிறப்ப வளர்த்துவருவதில் தலைசிறந்துள்ளார். வெளிநாட்டவர்கட்கும் தங்கள் அரும்பெருங்கல்வியை நன்கொடையாக வழங்குகின்றனர். 1951-52-க்கு நம் இந்தியாவுக்கு நாற்பது மாணவர்கட்கு நன்கொடைப் படிப்புக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். அதில், நம் சென்னை மாகாணத்துக்கு வரையறுக்கப்பட்டவர் நால்வர். அவர்களின் பெயர்கள் வருமாறு :

க. திரு. கே. இராமச்சந்திரன், சென்னை பிரசிடென்சிக் கல்லூரி அரசியல்நூற் பேராசிரியர்.

உ. திரு. எம். என். வெங்கடரமணி, இந்து பத்திரிகை நிருபர்.

ந. திரு. கே என். நாராயணன், அரசியல் தொழில்துறை முதன்மையர்.

ச. திரு. ஆர். கோபாலகிருட்டினன், மைசூர் உயர்மன்ற வழக்கறிஞர்.

இவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகத்து ஓராண்டு மேற்படிப்புப் படிக்க முழு ஊழிய நன்கொடை பெற்றுள்ளனர்.

எழுபத்தொன்பான் ஆண்டுப் பிறப்புநாள் பாராட்டு

சித்தாந்தப் பேராசிரியர் உயர்திரு. ந. சிவதருநாத பிள்ளையவர்களின் எழுபத்தொன்பான் ஆண்டுப் பிறப்புநாள் வள்ளுவர் யாண்டு கூகஅஉ ஆடித்திங்கள், உ0-ஆம் நாள் (5-8-51) துவங்குகின்றது; அதுவும் அவர்கள் பன்னெடுங்காலம் பல நன்மாணவர்கட்குப் பலமுறை பாடம் போதித்துவருவதில் அண்மையில் தொடங்கிய "நெஞ்சுவிடு தூது" என்னும் சித்தாந்தப் பொருள்நூல் நிறைவுறும் நாளும் ஒத்துவருகின்றது. இவ்விரண்டையும் கொண்டாடும்பொருட்டுத் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் சார்பில் ஒரு பேரவை 5-8-51 மாலை கூட்டப்பெறுகின்றது. அப்பேரவைக்குச் சாத்தூர் வழக்கறிஞர் 'சித்தாந்த சிரோன்மணி' திரு. T. S. கந்தசாமி முதலியாரவர்கள் தலைமை பூண்பார்கள்.

பல மெய்யன்பர்களின் பாராட்டும் வாழ்த்தும் பராவுதலும் நிகழும்; யாமும் அவர்கள் நெடுநாள் குறைவின்றி நிறையகவை எய்தி, சைவசித்தாந்தச் செஞ்ஞாயிறெனத் திகழ்ந்து, அச் செம்பொருட்டுணிவை வையமெலாம் பரப்பி உய்யச்செய்துவாழ அருள்புரியுமாறு அம்மையப்பர் திருவடியைச் செம்மை மனத்தால் தொழுவோமாக.

பிறர்க்கென வாழும் பெருந்தகையார்

பாரசீக முதலமைச்சர் திரு. டாக்டர் முஸாதீக் அவர்கள் உடல்நலம் இல்லாமல் படுக்கையிலிருந்தும் நாட்டு நலங்கருதி எல்லா அலுவல்களையும் நன்கு உன்னித்து வருகின்றனர். நெருக்கடியான நிலையில் தம்மாலான தொண்டை அரும்பாடுபட்டேனும் செய்வது கடமையும் உரிமையும் எனக் கருதுகின்றனர். மேலும் அவர்தம் சால்பு, சம்பள உம்பளங்கள்பெறுத் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். அம்மட்டோ, அரசியலார் அளித்துள்ள பொறியூர்தியையும் பயன் படுத்திக்கொள்வதில்லை. தம்முடைய பொறியூர்தியில் தம் செலவிலேயே போக்குவரவு புரிகின்றனர். இவர் உலகினுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

சென்னை யானை

மத்திய அரசியலார் வேண்டுகோளின்படி சென்னை. அரசியலார் சப்பான் பொருட்காட்சிச்சாலையில் வைப்பதற்கு அனுப்பும்பொருட்டு ஓர் ஆண் யானையைத் தெரிந்தெடுத்துள்ளார்கள். அதன் அகவை பதினைந்து. அது வாழ்ந்த இடம் நீலகிரி முதுமலைக் காடு.

எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கையாளுமாறு கட்டளையிடப் பெற்றுளதாம். எதிர்காலம் புதுவிதியில் அச்சாகும் புத்தகங்கள்தான் பள்ளிக்கூடங்களில் வைக்கப்படுமாம். ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம் அமைப்பாளர் (Convener). முதன்மைக் குறிப்பு :

க. உயிர் எழுத்துக்கள் அப்படியே இருக்குமாம். ஈ மட்டும் இ என்ற வடிவில் எழுதிச் சுழித்து எழுதப்படுமாம்.

உ. உயிர்மெய் யெழுத்துக்களில் உகரம் ஊகாரம் தவிர மற்றக் குறில் நெடில்களுக்கு ஒரேவிதமான எழுத்தமைப்புப் பொதுவாகப் பின் பற்றப்படுமாம். அந்த உயிர்க்குறியானது மெய்யெழுத்துடன் இணைக்கப் படாமல் தனியாக அதை எடுத்து எழுதப்படுமாம். இதனால் பாதிக்கப்படு பவை இ, ஈ என்ற உயிர் சேர்ந்த மெய் எழுத்துக்களும் லை, ளை, னை, ணை, று, ணு ஆகியவைகளுமாகுமாம். இவை லை, ளை, னை, ணை, னா, ணா என்று எழுதப்படுமாம். சீர்திருத்தப்பட்ட முறைப்படி 91 (தொண்ணூற் றொன்று) தமிழ் எழுத்துக்களிருக்குமாம்.

வ. உ. சி. கல்லூரி நன்கொடை

வ. உ. சி. கல்லூரி நன்கொடை, பெருமக்களிடமிருந்து வந்ததொகை ரூ. 1,10,000 திருவாவடுதுறை 25,000; ஜி. ராமச்சந்திரன் 10,000; டாக்டர். அழகப்ப செட்டியார் 5,000; பெயர் வெளியிட விரும்பாத நண்பர் 10,000; விந்தியா 25,000. அரசியலார் 60 ஏக்கர் நிலம், நன்கொடையாக உதவியுள்ளனர். அதில், $2\frac{1}{2}$ லட்சம் செலவில் கட்டடம் நிறுவப்பெற் றுள்ளது.

பிரிவு

அம்பாலா—நாயக் கரம்சிங தாயார் தன் மகன் செர்மன்போகச்சென்று காணமற்போய்விட்ட செய்திக்குப்பின் மகனிடமிருந்து எகிப்து மனைவி யுடன் வருவதாக வந்த கடிதம் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டதால் மூச்சு நின்றுவிட்டது, இறந்தாள்.

மலேயாவில் இந்தியமொழி

மலேயா—இந்தியமொழித் தொடக்கப் பள்ளிக்கூடம் சற்றேறத்தாழ தொள்ளாயிரம் இருக்கின்றன. தொடக்கப் பள்ளியில் தாய்மொழிக் கல்வியே சிறந்ததென்பது அடிப்படை உண்மை. அந்த இப்பொழுது அரசு மறுப்பது தவறு என்று பல கழகங்கள் வற்புறுத்துகின்றன.

மாஸ்கோ ரேடியோ கூறுவது

மாஸ்கோ ரேடியோ கூறுவது ஓர் இரசிய இளைய விஞ்ஞானி, நாயின் இருதயத்தை எடுத்துவிட்டு மாற்றிருதயம் வைத்துத் தைக்க அது பிழைத்து இரண்டாம் நாளே நடக்கத் துவங்கியது. வெற்றியடைந்தவர் டெனிக் கோலாவர்.

மதிப்புரை

பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1.

[ஆக்கியோர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறை விரிவுரையாளர் திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள். கிடைக்குமிடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்; அண்ணாமலை நகர்: விலை. ரூ. 5 8 0]

இந்நூல் ஆராய்ச்சியாளர்கட்கும், கல்லூரி மாணவர்கட்கும், ஆசிரியன்மார்கட்கும் பெரிதும் பயன் பெறக்கூடிய பெருநூலாகும். இதன்கண், கி. பி. 846 முதல் கி. பி. 1070 வரை முடியுடை வேந்தராய் முந்நாடும், வடநாடும், பிறநாடும், கடல்கடந்த ஈழம், கடாரம் முதலிய பன்னாடும் பன்முறை போர்செய்து தோலா மேலோராய் வென்று பெரும் புகழுடன், ஆண்மையும், ஆற்றலும், அறமுறையும், நெறிப்பொறை நீர்மையும், பணிந்த பகைமன்னர்க்கு வேண்டுவன நல்கி வாழ்விக்கும் நேர்மையும், மக்களைத் தன்னுயிர் எனக் கருதி இமையிற்காக்கும் பண்பமை மாண்பும் ஒருங்கமைந்த சோழர் மரபின் பதின்மூன்று தலைமுறையினர் வரலாறு தரப் பெற்றுள்ளது.

இதன் ஆசிரியர் அரும்பெரும் முயற்சியும் ஆர்வமுங்கொண்டு கல்வெட்டுக்கள், மெய்க்கீர்த்திகள், சங்கச் சான்றோர், பிற்காலச் சான்றோர் தம்பொய்யா நாவால் மெய்யாகக் கூறியருளிய விழுத்தகு நூல்கள், மேற்புல அறிஞர்களின் மெய்யுரைகள் அனைத்தையும் ஆய்ந்து தம் நுண்மாண் நுழை புலத்தாற் கண்ட உண்மைகளை நடுநிலை திறம்பாமல் நாட்டியுள்ளார்கள்.

பிற் சேர்க்கையாக, மெய்க்கீர்த்திகள், சரித்திரங்கள், பழைய பாடல்கள், மரபு அட்டவணை, பொருட்குறிப்பு அகராதி முதலியவும் சேர்க்கப் பெற்றுள்ளன. இடையிடையே சிறந்த சிற்ப அமைதிவாய்ந்த ஓவியங்கள், அவ்வவ் வேந்தர்கால ஆட்சி நிலப்பரப்புப்படம் முதலியவும் நூலை அணி செய்கின்றன. எளிய இனிய நடையும், செந்தமிழ்ச் சீர்மையும் கற்பார் கருத்தையீர்க்கும் கட்டுரைவன்மையும் காணக்கிடக்கின்றன. பெருமக்கள் மொழிவளமும நாட்டுப் பற்றும், நல்லாண்மையும் பெறுதற் பொருட்டு இந்நூலை இன்றியமையாது கற்கவேண்டும்.

இந் நூலாசிரியரவர்கள் முதற்குலோத்துங்க சோழன் வரலாறு, பாண்டியர் வரலாறு முதலிய நூற்களையும் வெளியிட்டுள்ளார்கள். தமிழகம் இந்நூலையும் வாங்கிப் பயனெய்தி இவ்வாசிரியரவர்களை மேன்மேலும் ஒல்லும் வகை ஊக்குவார்களாக.

இல்லறவொழுக்கம் [ஆக்கியோர்: யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் அவர்கள். விலை: அணா நான்கு. கிடைக்குமிடம்: சுத்தானந்த நிலையம், புதுக்கோட்டை.]

இது, முந்நூற்றறுபத்தைந்தடிகள் கொண்ட அகவற்பாவால் யாக்கப் பெற்றது. குடும்பவாழ்வுக்கும், நாட்டு நலனுக்கும், நல்லுயிர் வீட்டுக்கும் வழி காட்டியாக அமைந்துள்ளது. அழகிய பதிப்பு. அனைவர்க்கும் இன்றியமையாத தொன்று.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மறைமலையடிகள்—(புலவர் அரசு)

மறைமலையடிகள் ஒரு கல்விக்கடல். அவர்கள் வாழ்வே தமிழ் இலக்கிய காலத்தின் புரட்சிகரமான ஒரு வரலாறாகும். அடிகளின் பலவகை நிழலோவியங்களுடன் அமைந்தது.

மலிவுப் பதிப்பு ரூ. 2—4—0 உயரிய பதிப்பு ரூ. 3—4—0

நல்லொழுக்க வினாவிடை

—(கழகப்புலவர், ப. இராமநாத பிள்ளை அவர்கள்)

நல்லொழுக்கங்களையும் அறிவுரைகளையும் வினாவிடை முறையில் இள மாணவர்கட்கு அறிவுறுத்துவது. கல்வி நிலையங்களில் ஒழுக்கப்பாட (Moral class) வகுப்புக்கு வைப்பதற்குப் பெரிதும் ஏற்புடையது. கையடக்கமான பதிப்பு. விலை அணா 8

ஒட்டகத்தின் கதை—(N. K. வேலன்)

அழகு ஒரு சிறு ஒட்டகம, அதன் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதே இந்நூல். இளமாணவர்க்கேற்ப எளிய இனிய நடையில் எழுதி, பெரிய எழுத்தில் அச்சிடப்பெற்றுளது. படங்கள் பல நிறைந்தது.

மலிவுப் பதிப்பு ரூ. 0—8—0 உயரிய பதிப்பு ரூ. 0—14—0

திருமாவளவன்—(கா. கோவிந்தன் அவர்கள்)

மன்னர்களிற் சிறந்த கரிகாற் சோழன் வரலாற்றை பண்டைக்கால இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்குவது; புலவர் வரலாறு, நாட்டு வரலாறு, பழங்கால நிகழ்ச்சிகள் முதலியனவற்றைத் தெள்ளத் தெளிய வடித்துக்காட்டுவது. கண்கவர் வனப்புமிக்க, மேலட்டையுடன் அமைந்தது.

மலிவுப் பதிப்பு ரூ. 1—8—0 உயரிய பதிப்பு ரூ. 2—0—0

தெனாலிராமன்—(முத்தமிழ்மணி)

நகைப்புக்கு இடனாக மிளிர்வது தெனாலிராமன் கதை; அதைத் தூய செந்தமிழ் நடையில் நாடகமாகப் புத்தம்புதிய நற்கருத்துக்கள் மிளிர, திரு. முத்தமிழ்மணி எழுதியுள்ளார். அழகிய இருவண்ண மேலட்டை.

மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0 பரிசுப் பதிப்பு ரூ. 2—8—0

அறிவுலக மேதை பெர்னாட்ஷா

—(கா அப்பாத்துரைப் பிள்ளை M A, L T,)

மாணவர் முதல் சீர்திருத்தத்திறலோர் ஈறாக அனைவரும் கற்றுணர்ந்து பயன் எய்துவதற்கு ஏற்ற நூல். இதன்கண் பெர்னாட்ஷாவின் விரிந்த வரலாறு, விளக்கப்பட்டுள்ளது.

மலிவுப் பதிப்பு ரூ. 1—12—0 பரிசுப் பதிப்பு ரூ. 2—8—0

ணா 400

அன்பர்களுக்கு வேண்டுகோள்

அரும்பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளா, மொழிவல்லுநர் ஆகியோர் இலக்கிய நயம்தோன்ற அரிய பொருள்களைப்பற்றி உயர்ந்த நடையில் எழுதிய சிறந்த கட்டுரைகளையும், செய்யுள்களையும், ஆராய்ச்சிகளையும் தாங்கி, நம் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழ் கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்பதைத் தமிழன்பர்கள் இனிதறிவார்கள்.

வியத்தகும் இலக்கியக்கருத்துக்களையும், நயங்களையும், அரிய ஆராய்ச்சிகளையும் அவ்வப்போது வெளியிட்டு, தமிழர் தம் சிந்தனைக்கு நம் செல்வி இடமளித்து வருகிறது. இவைகளைக் கற்கக்கற்க மணற்கேணிபோன்று கருத்துக்கள் ஊற்றெடுத்துப் பெருகுவதையும் தமிழன்பர் சிறப்பாக செல்வியன்பர் நன்கறிவர்.

'தமிழ்மொழி வளர்ச்சி பெறவேண்டும்; தாய்மொழி உயர்வடைய வேண்டும்' என்னும் எண்ணம் பெருகப் பெருகத் தமிழ்மக்கள் நம் செல்வியைப் பொன்னினும் மேலாய்ப் போற்றிவருவதும் அன்பர்கள் அறியாததொன்றல்ல. நூல்நிலையத்தாரும், சொற்பொழிவாற்றுவோரும், கட்டுரையாளரும், ஆராய்ச்சித் திறன் அமைந்தோரும் கட்டடம் பெற்ற நம் செல்விச் சிலம்புகளைச் செல்வக்களஞ்சியமாகப் பேணிவருவதும் கண்கூடு.

எனவே, இவ்விதழுடன் செந்தமிழ்ச் செல்வியின் இருபத்து ஐந்தாம் சிலம்பு முற்றுப்பெற்று, அடுத்த இதழ் இருபத்து ஆறாம் சிலம்பின் முதற்பரல் தொடங்கி இன்னும் பல புத்தம் புதுக் கருத்துக்களுடன், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் வெளிவரும் என்பதை எல்லா அன்பர்கட்கும் முன் கூட்டியே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

செல்வி அன்பர்கள் தாம் மட்டும் கையொப்பம் அனுப்புவதோடு நில்லாமல், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்னும் ஆன்றோர் கூற்றுப்படி தம்தம் அன்பர்களையும், நண்பர்களையும் கையொப்பம் அனுப்பும்படி ஊக்கித தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரியுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்